Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 161

ஞாயிற்றுக்கிழமை
05 மே 2024

சித்திரை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இலைவின்ர வாக்கரசியல் விளையாட்டுக்காக அரிசி குடுத்திட்டு, எலக்சன் முடிய கடைசியில எங்களுக்கு வாய்க்கரிசிதான் போடுவினம் கண்டியளோ"

# தேர்தலுக்காக வாக்காளர்களுக்கு லஞ்சம் வழங்கல் ஆரம்பம்

## இலவச அரிசி விநியோகமும் அதுவே சாடுகிறது 'பவ்ரல்' அமைப்பு



**கொழும்பு, மே 5**

**வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்குவதற்காக அரசாங்கம் அரச சொத்துகளை தவறாகப் பயன்படுத்துகின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' சுட்டிக்காட்டியுள்ளது.**

03

## பஸில் – ரணில் நேற்றும் பேச்சு

கொழும்பு, மே 5

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் நேற்றுச் சனிக்கிழமை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - மஹகமசேகர மாவத்தையில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. பஸில் ராஜபக்ச அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பின்னர் இருவருக்கும் இடையில் ஐந்தாவது தடவையாக இடம்பெற்ற சந்திப்பு இதுவாகும். (அ-ஒ-இ)

## தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்

### தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சிவில் சமூக தூதுக்குழு சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அந்தக் கட்சிகளின்

03

## வெளியகத் தலையீடு வேண்டவே வேண்டாம்

### அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு

கொழும்பு, மே 5

ஒருமைப்பாடு மற்றும் தேசிய நல்லிணக்கத்தை அடைந்து கொள்வதை முன்னிறுத்தி எவ்வித வெளியகத் தலையீடுகளுமின்றி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற உள்ளக செயன்முறைகளை நிறுவுவதற்கும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கும் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாடு குறித்து ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரிடம் எடுத்துரைத்ததாக

03

## நயினாதீவு – குறிகாட்டுவான் புதிய பாதைப் படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 5

நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையே படகுப் பாதைச் சேவையை புதிதாக முன்னெடுப்பதற்குத் திட்ட முன்மொழிவொன்றை வடக்கு மாகாண வீதி

03

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை

## வடக்கு மாகாணத்திலிருந்து 27, 644 பரீட்சார்த்திகள்

யாழ்ப்பாணம், மே 5

வடக்கு மாகாணத்திலிருந்து 27 ஆயிரத்து 644 பரீட்சார்த்திகள் இந்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக வடமாகாண

03

## மாடுகளை அடைத்து ஏற்றிவந்தவர் கைது

### 10 மாடுகளும் மீட்பு

யாழ்ப்பாணம், மே 5

நெடுந்தீவிலிருந்து மாடுகளைச் சித்திரவதைக்கு உள்ளாக்கும் முகமாக லொறியில் ஏற்றிச்சென்ற 36 வயதான சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் 10 மாடுகளையும் நேற்று மாலை மீட்டுள்ளனர்.

03

## தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புகிறதாம் இலங்கை

### ஜப்பான் ஆதரவு

கொழும்பு, மே 5

தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்தால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு ஜப்பான் ஆதரவளிக்கும் - இவ்வாறு இருநாள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவா தெரிவித்துள்ளார்.

03

ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகில்

## சட்டவிரோத கொல்களம் பொலிஸிடம் சிக்கியது

### 27 ஆடு, மாடுகள் உயிருடன் மீட்பு
### இராணுவத்துக்கும் தொடர்பு எனச் சந்தேகம்



யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாண நகரத்தில் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பாழடைந்த கட்டடத்தில் நீண்டகாலமாக

03

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துயரத்தின் சின்னமாக மாறியுள்ளது மணிப்பூர்

## கார்கே கடும் காட்டம்

**புதுடில்லி, மே 5**

**பா.ஜ.க. அரசாங்கத்தின் மோசமான சிந்தனையால், இந்தியாவில் இன்று துயரத்தின் சின்னமாக மணிப்பூர் மாறியுள்ளது என்று காங்கிரஸின் மூத்த தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.**

மணிப்பூரில் அண்மைக்காலமாக மதப்பதற்றமும் சமூகக் குழுக்கள் சார்பான போராட்டங்கள் மற்றும் தீவிரவாதச் செயற்பாடுகளும் அதிகரித்துள்ள நிலையில், இந்த நிலைமையை பா.ஜ.க. அரசாங்கமே திட்டமிட்டு ஏற்படுத்தியதாக கார்கே குறிப்பிட்டுள்ளார்.

மணிப்பூரில் மனிதநேயம் அழிந்தது. அக்கறையற்ற மோடி அரசும், திறமையற்ற மாநில பா.ஜ.க. அரசும் இணைந்து மாநிலத்தை இரண்டாகப் பிரித்தன. துளியும் வருத்தமில்லாத பிரதமர் மோடி மணிப்பூரில் காலடி எடுத்து வைக்கவில்லை. அவரது ஆணவம் ஒரு அழகான மாநிலத்தின் சமூகக் கட்டமைப்பை சேதப்படுத்தியுள்ளது. பா.ஜ.க. எப்படி தங்கள் வாழ்க்கையை துயரமாக மாற்றியது என்பதை மணிப்பூரின் அனைத்துச் சமூக மக்களும் அறிவார்கள் என்று மல்லிகார்ஜுன கார்கே மேலும் தெரிவித்துள்ளார். (ம)


## Restaurant Waiter
## உடனடி வேலை வாய்ப்பு

**Happy Home Restaurant**
**Vaddukoddai**

வயதெல்லை - 20-45

குறிப்பு :- தங்கிநின்று வேலை செய்யக் கூடியவர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும்.

**T.P: 077 438 6508, 075 291 3579**

(CR 42364) A-1



## நாகபூஷணி திருமண சேவை

**50% கட்டணக் கழிவு**
(05.05.2024 முதல் 15.05.2024 வரை)

பல்லாயிரக் கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து நீங்கள் விரும்பும் மணமக்களை மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

**10/2, பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
**(யாழ். வேம்படிச் சந்திக்கு அருகில் BCAS Campus இற்கு பக்கத்து லேன்)**

**021 222 9306, 077 138 7596, 071 9999 306**


## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 06 . 1937

மறைவு 04 . 05 . 2024

### திருமதி கந்தசாமி தெய்வநாயகி

கருகம்பனையை பிறப்பிடமாகவும் கிராம்புவில் மேற்கு கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி தெய்வநாயகி 04.05.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் நளாயினி (ஜேர்மனி), இராமகிருஷ்ணன் (சிறி), ஹிமாலினி (அமரர் ஜேர்மனி), பவானி சிறிதேவி (சாவகச்சேரி கல்விவலயம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் விஜயன் (ஜேர்மனி), சோமசௌந்தரி (உதவித்தபால் அதிபர் யாழ்ப்பாணம்), சத்தியசீலன் (ஜேர்மனி), ஜெயராசா, ஜெயகுமார், ஆகியோரின் அன்பு மாமியாரும் கபில்ராஜ், வாயல்யோய், சாம், சாரா, ஆதித்தன், அபிசன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 05.05.2024 பகல் 12.00 மணியளவில் அவரது இல்லதில் நடைபெற்று இறுதிக்கிரியைகள் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் செய்வதற்காக பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்வயல்,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CR 42365) V-1


## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

பிளசர், டிஸ்கவரி மோட்டார் சைக்கிள் சொந்த பாவனையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.

**076 1124 145**



## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல்யமான கம்பனிக்கு வட மாகாணம் முழுக்க முகாமையாளர்கள், அலுவகை, வெளிக்கள, Marketing, பகுதி நேர, காப்புறுதி துறையில் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

**076 1124 145**



## காணி, வீடு விற்பனைக்கு உண்டு

கோப்பாய் தெற்கு கிராம சபை ஒழுங்கையில் கிராம சேவையாளர் பிரிவு J/260 நில.பர.3 குளி 8.50 அளவுள்ள காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு

**077 9672 152**
**077 9024 248**


## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 11 . 1944

மறைவு 04 . 05 . 2024

### வேலுப்பிள்ளை சண்முகரட்ணம்

**(ஓய்வுபெற்ற விரிவுரையாளர், பொறியியல்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)**

காரைநகர் சடையாளியை பிறப்பிடமாகவும் காரைநகர் சம்பந்தர் கண்டியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சண்முகரட்ணம் (ஓய்வுபெற்ற விரிவுரையாளர் பொறியியல்பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்) நேற்று (04.05.2024) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற VM பரமநாதன் மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் (ராசு) அன்புக் கணவரும், குமாரசாமி சிவகுருநாதன் முருகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், முருகேசு வரதராசா, ஆனந்தராசா, சற்குணராஜா தயானந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது காரைநகர் சம்பந்தர்கண்டி இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 54947) A-1

## மரண அறிவித்தல்

பிரம்மனே நமக



தோற்றம் 10 . 10 . 1948

மறைவு 04 . 05 . 2024

### சிவக்கொழுந்து லோகநாதன்

நீர்வேலி வடக்கு கேணியடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து லோகநாதன் (தாடி), (MSL Construction Proprietor) 02.05.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து சின்னப்பிள்ளை ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கணகரத்தினம் கணேசம்மா ஆகியோரின் மருமகனும், மகேஸ்வரி, சுசிலா ஆகியோரின் பாசமிகு அன்பு கணவரும், சுதர்ஜனன் (Swiss), சுதாஜனி (Medical Officer-District Siddha Hospital-Jafna), கிரிஜன் (MSL Construction), நிரோஜனன் (Technical Officer-Road Development Department-Point pedro), உஷாஜனனி (S.L.T.B-Kaarainagar), ஆகியோரின் அன்புத் தந்தையும், வர்ணகுலா (Swis), விக்னராஜா (Lanka-Tiles-Storekeper) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆரபியின் (Swis), அன்புத்தாத்தாவும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதியம்மா, நடராஜா, இலட்சுமிப்பிள்ளை, தியாகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.05.2024 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 498 9794** (whatsapp)
**077 470 9507**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 422) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலுக்காக...

இது தொடர்பில் 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளதாவது:-
ஜனாதிபதித் தேர்தலை நோக்கமாகக்கொண்டு அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது.
வறிய மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தால் வரி செலுத்துவோரின் மில்லியன் கணக்கான பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.
அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அரசாங்கம் 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இது ஜனாதிபதித் தேர்தலை மையமாக கொண்ட நடவடிக்கை. ஓகஸ்டில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகும். இதன் காரணமாகவே அரசாங்கம் ஜுலை 31ஆம் திகதிக்குள் இந்தத் திட்டங்களைப் பூர்த்தி செய்ய விரும்புகின்றது - என்றார். (அ-ஒ-ச-இ)

## நயினாதீவு...

அபிவிருத்தி அதிகாரசபை தலைமைப் பணிமனைக்கு அனுப்பி வைத்துள்ளது.
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் பிரதான கடல் மார்க்கத்தின் போக்குவரத்தை இலகுபடுத்தும் முகமாக இந்தத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.
இதற்காக சுமார் 200 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சேவையில் 100 பயணிகள் மற்றும் வாகனங்களை ஒரேதடவையில் ஏற்றிச்செல்லமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

## வெளியகத்...

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.
இருநாள் உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவா மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் கூட்டு ஊடகச் சந்திப்பு கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (அ-ஒ-இ)

## வடக்கு...

கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் தெரிவித்தார்.
"நாளை முதல் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன. 27 ஆயிரத்து 644 பரீட்சார்த்திகளில் 4 ஆயிரத்து 279 தனியார் பரீட்சார்த்திகளும், 23 ஆயிரத்து 365 பாடசாலை பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். மாகாணப் பரீட்சை விடைத்தாள் சேகரிப்பு நிலையங்களாக 6 நிலையங்களும், பரீட்சை இணைப்பு நிலையங்களாக 77, பரீட்சை மத்திய நிலையங்களாக 242 நிலையங்களும் செயற்படவுள்ளன" என்றார் குயின்ரஸ். (அ-ஒ-125)

## சட்டவிரோத...

இயங்கி வந்த சட்டவிரோதக் கொல்களம் சுற்றிவளைக்கப்பட்டது. கொல்களத்தில் இறைச்சியாக்கப் படுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருந்த ஆடுகள், மாடுகள் என்பனவும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிஷாந்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்தச் சுற்றிவளைப்பை நேற்று மேற்கொண்டனர்.
இதன்போது நான்கு மாடுகள் வெட்டப்பட்டுள்ளன. அவற்றின் தலைகள் உட்பட மாட்டின் உடற்பகுதிகள் அங்கு இருந்தன. மேலும், 21 மாடுகள் உயிருடன் மீட்கப்பட்டன. 4 பெரிய ஆடுகள், இரண்டு குட்டி ஆடுகளும் மீட்கப்பட்டன.
மாடுகளைத் திருடிக்கொண்டு வந்து இங்கு வெட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒருநாளைக்கு 6 மாடுகள் வெட்டப்படுவதாகவும் கூறப்படுகிறது. ஆடுகள் மற்றும் மாடுகள் என்பனவற்றை வெட்டுவதற்குப் பயன்படுத்திய கூரிய ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.
இந்தக் கொல்களத்துக்கு இராணுவம் உடந்தையாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.
உயிருடன் மீட்கப்பட்ட மாடுகள் உணவோ, தண்ணீரோ இன்றி வாடிய நிலையில் இருந்தன. அவற்றுக்குப் பொலிஸார் உடனடியாக உணவும், தண்ணீரும் வழங்கினர். (அ-ஒ-26-125-66)

## தேசிய...

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் கூட்டு ஊடகச் சந்திப்பு நேற்று சனிக்கிழமை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
"நண்பன் என்ற ரீதியில் இலங்கைக்கு அவசியமான ஒத்துழைப்புகளை ஜப்பான் தொடர்ந்து வழங்கும் என்ற செய்தியைக் கூறுவதற்காகவே இலங்கைக்கு வந்துள்ளேன். இலங்கைக்கும் உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர் குழுவினருக்கும் இடையில் வெகுவிரைவில் இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கின்றேன். இருப்பினும் அந்த இணக்கப்பாடு வெளிப்படைத்தன்மை வாய்ந்த முறையில் அடைந்துகொள்ளப்பட வேண்டும்" - என்றார். (அ-ஒ-இ)

## மாடுகளை...

நெடுந்தீவிலிருந்து 20 மாடுகளைப் படகுமூலம், குறிகாட்டுவான் இறங்குதுறைக்குக் கொண்டு வந்து அங்கிருந்து அவற்றை யாழ்ப்பாணம் ஏற்றி வந்துள்ளனர். 10 மாடுகளை பண்ணையில் இறக்கி அவற்றை விற்பனை செய்த பின்னர் மிகுதி 10 மாடுகளையும் லொறியில் ஏற்றிச்சென்றவேளையே, யாழ்ப்பாணப் பொலிஸாரால் லொறிச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.
லொறியில் இருந்த 10 மாடுகள் மற்றும் லொறியை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்ற பொலிஸார், கைது செய்யப்பட்ட சாரதியை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். லொறி ஒன்றில் 5 மாடுகளையே ஏற்றிச் செல்லமுடியும் எனவும், அவற்றுக்கு மேலதிகமாக ஏற்றிச் சென்றமையால் விலங்குகளைச் சித்திரவதைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ-26-125)

## தமிழ்ப்...

நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுடன் சிவில் சமூகத் தூதுக்குழு நேற்றுச் சந்திப்பை மேற்கொண்டுள்ளது.
சிவில் சமூகங்களின் தூதுக்குழுவின் சார்பில் அரசறிவியல் விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், யதீந்திரா, அ.யோதிலிங்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள விடுதியில் இந்தச் சந்திப்பு நேற்று மாலை நடைபெற்றுள்ளது.
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்படவேண்டும் என வவுனியாவில் இடம்பெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளின் தூதுக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.
அந்தக் குழு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுடன் சந்திப்பை நடத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, சந்திப்பில் பங்கேற்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாட முடிவு செய்யப்பட்டுள்ளது.
மேலும், தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கத்துக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ-100)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாகும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். தாய் மாமன் வழியில் சுபச் செலவு ஏற்படும்.

**துலாம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் சற்று எச்சரிக்கையாக நடந்துகொள்வது அவசியம்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. இடையூறுகள் விலகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கும் எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூர் வெற்றி

**குஜராத் அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் பெங்களூர் அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.**



ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டம் பெங்களூரில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

ஓட்டகுவிப்பாக விளங்கும் பெங்களூர் மைதானத்தில் குஜராத் அணி ஆரம்பத்திலிருந்து பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டதுடன் பவர்பிளேயில் 23 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. பின் வரிசையில் ராகுல் திவாட்டியா 21 பந்துகளில் 35 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றார். இறுதியில் அந்த அணி 147 ஓட்டங்களை சகல இலக்குகளையும் இழந்து பெற்றது.

பதிலளித்து ஆடிய பெங்களூர் அணிக்கு டு பிளெஸிஸ், கோலி இணை அதிரடியாக ஆடி ஆட்டத்தை விரைந்து முடிக்க முற்பட்டனர். ஆனாலும் பிளெஸிஸ் 23 பந்துகளில் 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததும் பெங்களூரின் இலக்குகள் அடுத்தடுத்து சரியத் தொடங்கின. கோலி மறுமுனையில் நின்று நிதானமாக ஆடியபோதும் 27 பந்துகளில் 42 ஓட்டங்களுடன் அவரும் வெளியேறினார். இறுதியில் தினேஸ் கார்திக் சிறப்பாக ஆடி வெற்றியுடன் ஆட்டத்தை முடித்தார். 13.4 பந்துகளில் 6 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது பெங்களூர். (ஒ-5)

## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்!



மத்திய பிலிப்பைன்ஸில் உள்ள தீவு மாகாணமான லெய்டில் நேற்று 6.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தில் குறிப்பிட்டளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் எனினும் எவருக்கும் உயிராபத்தோ அல்லது சுனாமி அச்சுறுத்தலோ ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06.10.1950



மறைவு 03.05.2024

### திருமதி சறோஜாதேவி செல்வநாயகம்
### (கிளி அக்கா)

கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜாதேவி செல்வநாயகம் அவர்கள் கடந்த (03.05.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், செல்வநாயகம் (பிருந்தா ஜுவல்லறி) முன்னைநாள் உரிமையாளரின் அன்பு மனைவியும், பிரதீபன், பிரகாஜினி, பிருந்தாஜினி, பிரகலாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர்களான அருந்தவநாயகம், தர்மகுலசிங்கம், ரதி மற்றும் லீலாவதி, சந்திரா, ராதா, சிறிதரன், மீனா, மீனலோஜினி, சிவசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருந்தா, துஸ்யந்தன், பிரபாகரன், ஜனுல் ஆகியோரின் அன்பு மாமியும், டருண், சருண், வினுஜன், கீர்த்தி, கிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சின்னம்மா, நவரத்தினம் மற்றும் செல்வராசா, சபாபதிப்பிள்ளை, தவமணிதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கைதடி வடக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 918 1173, 021 205 7245

(CS 407) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 11.04.1964 — மறைவு 04.05.2024

### திருமதி சத்தியலோஜினி ஜெயந்திக்குமார்

(ஓய்வுநிலை ஆசிரியர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியலோஜினி ஜெயந்திக்குமார் நேற்று (04.05.2024) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகையா - விஜயமலர் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயந்திக்குமார் (விக்னா கல்வி நிறுவகம், விக்னா இரும்பகம்) அவர்களின் பாசமிகு மனைவியும், விதுர்ஷிகா (கிழக்குப் பல்கலைக்கழகம்), லதுர்ஷனன் (பொறியியல் பீட மாணவன் 3ஆம் வருடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவதர்ஷன் (கிழக்குப் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமியாரும், சத்தியேந்திரா, சத்தியவாணி (பிரதேச செயலகம் - சங்கானை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற லோகராசா, தர்மலிங்கம், ஆகியோரின் மருமகளும், காலஞ் சென்றவர்களான கனகமணி நாகேஸ்வரி மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன், மகேஸ்வரன் மற்றும் ஞானேஸ்வரன், ஈஸ்வரகுமார், ரஞ்சித்குமார், சந்திரவதனி (சுவிற்றி), காலஞ்சென்ற நடனேந்திரன் (முன்னாள் தவிசாளர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாவடி லேன் சுதுமலை தெற்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இன்று (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 076 2646514 (மகன்)

(CS 407) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண்ணின்
# உரிமை
# உங்களுக்கே

**20** இலட்சம் குடும்பங்களுக்கு

## முற்றிலும் சொந்தமான காணி உறுதிகள்

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்படி அனுமதிப்பத்திரம்/கொடுப்பனவுப் பத்திரமுள்ளவர்களுக்கு அக் காணியின் முழு உரிமையும் கிடைக்கக்கூடிய காணி உறுதிகள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலாளரிடம் ஒப்படையுங்கள்.

சனாதிபதி அலுவலகம்
presidentsoffice.gov.lk

## சொந்த உரிமையின் அருமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப்போராட்ட வரலாற்றில் பீஷ்மரே ஈழவேந்தன்!

யாழ்ப்பாணம், மே 5

**தமிழின விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஈழவேந்தன் ஐயா ஒரு தனிமனித சரித்திரமாகத் திகழ்ந்தவர். அவர் இவ்வுலகில் இருந்து மறைந்தாலும் ஈழத்தமிழர்களின் உள்ளங்களில் நீக்கமற நிலைத்திருப்பார் இவ்வாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தனது அஞ்சலிக் குறிப்பில் தெரிவித்துள்ளது.**

அந்த அஞ்சலிக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது ஈழ விடுதலைப் பயண வரலாற்றில் தடம் மாறாமல் உயர்ந்த இலட்சியத்துடன் பயணித்த

விடுதலைச்செம்மல்மா.க.ஈழவேந்தன் ஐயாவின் மறைவு எம்மையெல்லாம் பெருந் துயரில் ஆழ்த்தியுள்ளது. ஈழவேந்தன் ஐயா எமது தேசவிடுதலை வரலாற்றில் ஒரு பீஷ்மராகத் திகழ்ந்தவர். எமது தேசியத்தின் மீதும், தேசத்தின் மேலும் கொண்ட அசைக்க முடியாத பற்றுறுதியாலும், தனது ஆழ்ந்த புலமையாலும், அறிவாற்றலாலும் சிறந்த பேச்சுவன்மையினாலும் சுமார் 75 ஆண்டுகளாக தேசவிடுதலைக்கு உரமூட்டி வள மூட்டியவர்.

ம.க.கனகேந்திரன் என்ற இயற்பெயரைக் கொண்ட ஈழவேந்தன் தனது சிறு பராயத்திலிருந்தே ஈழத்தமிழினத்தின் விடுதலைப் பயணத்தில், தந்தை செல்வாவின் பாசறையில் தன்னை இணைத்துக் கொண்டவர். அன்றைய காலத்தில் இன ஒடுக்குமுறைக்கு எதிராகத் தந்தை செல்வா தலைமையிலான பல அறப்போராட்டங்களில் பங்கெடுத்தவர். இலங்கை மத்தியவங்கியில் உயர்பதவி வகித்த போது 1956இல் சிறிலங்காவின் பிரதமரான இன வெறியர் பண்டாரநாயக்க தமிழர்களை ஒடுக்கத் தனிச் சிங்களச் சட்டத்தினைக் கொண்டு வந்து அனைத்துத் தமிழ் அரச பணியாளர்களும் கட்டாயமாக சிங்களம் கற்க வேண்டுமெனத் திணித்தபோது தனது கொள்கைக்கு முன் தனது பதவியைத் துச்சமென எண்ணித் தூக்கியெறிந்தவர். பதவிக்காகவும், பணத்துக்காகவும் தமது கொள்கைகளைக் கைவிடுகின்றவர்கள் மத்தியில் தனது கொள்கைக்காகத் தொழிலையே துறந்த இனமான செம்மல் ஈழவேந்தன் ஐயா - என்றுள்ளது.

தமிழ்த் தேசியத்துக்கு அளப்பெரும் பணிகளைச் செய்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈழவேந்தன் புலம்பெயர்ந்து கனடாவில் வசித்து வந்தார். அண்மைக்காலமாக சுகவீனம் அடைந்திருந்த அவர் ஒன்றாறியோவின் ரொறன்ரோ மருத்துவமனையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்தார். அவரின் இறுதிச் சடங்குகள் ரொறன்ரோவில் இன்று இடம் பெறுகின்றன.

(ம-66)

## ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி போராட்டம்

யாழ்ப்பாணம், மே 5

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் பி.ப. 3 மணிக்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் முன்பாக யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் போராட்டம் நடத்தப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கோசங்கள் எழுப்பப்பட்டன.

அத்துடன், ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், அரச அதிகாரிகள், அரச பலங்களைப் பிரயோகித்து ஊடகவியலாளர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி, அச்சுறுத்துவது உள்ளிட்ட செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஒ-26)


### வீடு விற்பனைக்கு

- வவுனியா தோணிக்கல் பிரதேசத்தில் ஒரு பரப்புக்குக் கூடிய உறுதிக்காணியில் மேல் மாடியும் கட்டக் கூடிய வரையில் வீடு விற்பனைக்கு உள்ளது. அல்லது அயல் கிராமத்தில் 4 பரப்பு உறுதிக் காணிக்கு மாற்றம் செய்யலாம்.
- 3 அறைகள் கொண்ட வேறு வீடுகளும் வாடகைக்கு கிடைக்கும்.

076 322 3687, 024 222 2289

(CS/28404) J-1


### துயர் பகிர்கின்றோம்

யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர்

**திரு நடராசபிள்ளை தசரதன்**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நடராசபிள்ளை வள்ளியம்மை**

அவர்கள் 29.04.2024 அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து மிகுந்தகவலையடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறையினர் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**புவியியற்றுறை**
**யாழ் பல்கலைக்கழகம்**

(CS/54941 ) J-1

### துயர் பகிர்கின்றோம்

யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர்

**திருமதி பிரதீபா விபுலன்**

அவர்களின் அன்பு மாமியார்

**நற்குணராசா மனோன்மணி**

அவர்கள் 01.05.2024 அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து மிகுந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறையினர் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**புவியியற்றுறை**
**யாழ் பல்கலைக்கழகம்**

(CS/54941 ) J-1




### மணமகன் தேவை

யாழ். இந்து (V) 1996 ஆயிலியம் 9 இல் சூரியன், செவ்வாய் எஞ்சினியர், 1992 திருவாதிரை 01 இல் செவ்வாய் உத்தியோகம் (MA). மணமகன்கள் தேவை. (CS/28121) J-1

077 964 9245

### தேவை

பப்பட வேலையில் அனுபமுள்ள மற்றும் பழக விரும்பும் ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

076 803 5175

(cs.54932) (N-1)

### காணி, மற்றும் வீடு விற்பனை

சுன்னாகம் டொக்டர் சுப்ரமனியம் வீதியில் அமைந்துள்ள 6 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 075 437 2198


### மரண அறிவித்தல்

**ராஜகுலேஸ்வர நகுலாதேவி**



தோற்றம் 14.10.1955 மறைவு 29.04.2024

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜகுலேஸ்வர நகுலாதேவி காலமானார்.

அன்னார் குகபாலன், தயாலினி (சுவிஸ்), சாந்தினி, பத்மினி, ரமேஸ் (கோண்டாவில்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 08.05.2024 புதன்கிழமை 12.00 மணியளவில் ஜேர்மனியில் அடக்கம் செய்யப்படும்.

**தொடர்புகளுக்கு**
**ரமேஸ்: 077 901 6539**

(CS 403)V-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### மரண அறிவித்தல்



மலர்வு 02 . 06 . 1938

உதிர்வு 01 . 05 . 2024

**நற்குணராசா மனோன்மணி**

முல்லைத்தீவு தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட நற்குணராசா மனோன்மணி அவர்கள் கடந்த 01.05.2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - நாகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நற்குணராசாவின் அன்பு மனைவியும், வாசுகி (பிரான்ஸ்), தேவகி (பிரான்ஸ்), சங்கர் (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), முரளி (பிரான்ஸ்), றெஜீந்திரன் (லண்டன்), விபுலன் (ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), அகிலன் (யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), நவறஞ்ஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கைலயன்கிரிவாசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (பிரான்ஸ்) மற்றும் சறோஜினிதேவி (பிரான்ஸ்), சிறிரவீந்திரன் (பிரான்ஸ்), தவச்செல்வி (பிரான்ஸ்), குமுதறஜனி (லண்டன்), பிரதீபா (விரிவுரையாளர் - புவியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்), அருள்மதி (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, கணபதிப்பிள்ளை மற்றும் செல்வராசா (ஸ்ரார் ஜீவல்லறி, புத்தளம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரமலர், சற்குணதேவி, பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிந்துஜா, சாருஜா, ஜெனுசன், சுகிர்சன், அபிவருணன், அபிஷன், அனிஷன், அஷ்விந்தன், துஷிந்தா, சோபிகா நிருஷா, வேதிகா, அன்றியா, யொசுவா, வெர்ஜினி, றெமி, ஐஸ்வரியன், அம்ஷவி, அக்ஷிகா, அஷ்விதன், ரிஷிகா, ஆருஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜலீன், அலிஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**
**077 495 2024, 071 861 7949**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 54924) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனிதன் - இயந்திரம் இணைந்த விவசாயம்

வடக்கு மாகாணத்தில் முதல்முறையாக ட்ரோன்கள் மூலம் கிருமிநாசினி விசிறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. 21ஆம் நூற்றாண்டுக்கான விவசாயப் புரட்சியின் முக்கியமான செயற்றிட்டங்களில் ஒன்றான 'ட்ரோன்கள் மூலமாக கிருமிநாசினி விசிறும் செயற்பாடுகள்' மன்னாரில் உள்ள பயறுச் செய்கையில் முன்னெடுக்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதே. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இந்த நவீனத்துவத்தால் வரப்போகும் சாதக பாதகத்தனங்களை உய்த்துணர்ந்தவர்களாக செயற்பட வேண்டியது எம்முன்பாக உள்ள கூட்டுப் பொறுப்பாகவே காணப்படுகின்றது.

சோளன்கள் இலகுவாக பூச்சித் தாக்கத்துக்கு உட்படும் தன்மையின. இதனால், சோளன் தோட்டத்தில் ஏற்படக்கூடிய பூச்சி, புளுத் தாக்கத்தை விரைவாகக் கட்டுப்படுத்துவதற்கும் மிகக்குறைந்த நேரத்தில் கூடுதலான பரப்பளவில் கிருமிநாசினிகளைத் தூவுவதற்காகவும் அமெரிக்காவால் முதன்முதல் ட்ரோன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. வேறு நாடுகள் இதற்கு உரிமை கோரினாலும், பரந்துபட்ட அளவில் பெருமெடுப்பில் இவை நடைமுறைச் சாத்தியமாக்கப்பட்டது அமெரிக்க சோளன் தோட்டங்களிலேயே. பின்னர் படிப்படியாக மேற்கு நாடுகளிலும், மத்திய கிழக்கிலும் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு இன்று ட்ரோன்களை விவசாயத்துக்குப் பயன்படுத்தாத நாடுகளே இல்லை என்னும் அளவுக்கு அதன் பயன்பாடு பல்கிப் பெருகியுள்ளது. இங்கே கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்ற அடிப்படையில் இந்த நாடுகள் ட்ரோன்களின் பயன்பாட்டை நாடவில்லை. சிலகாலத் திட்டமிடல்கள் அந்தந்த நாடுகளுக்குத் தேவைப்பட்டன. அந்தப் பரிசீலனைகள் இலங்கையில் மேற்கொள்ளப் பட்டனவா? என்ற கேள்விக்குப் பதில் தேட வேண்டியது இங்கு காலத்தேவையானது, கட்டாயமானது.

ட்ரோன்களை விவசாயத்துக்குள் கொண்டுவருகின்றபோது நிச்சயமாக அது 'உற்பத்திசார்' ஆரோக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தவே செய்யும். கூடுதலான நிலப்பரப்பை மிகக்குறைந்த நேரத்துக்குள் கண்காணிக்கவும், மேற்பார்வை செய்யவும், கிருமிநாசினிகளைத் தெளிக்கவும் ட்ரோன்கள் உதவும். ஆனால், இத்தனை காலமும் இந்தக் கடமைகளை நிவர்த்தித்துக் கொண்டிருந்த மனித வலு என்னவாகப் போகின்றது? இயந்திரங்களின் அறிமுகமும், அதன் அதீத பயன்பாடும் ஒவ்வொரு விடயத்திலும் ஏதோவொரு வகையில் தொழிலிழப்புகளை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. எனவே ட்ரோன்களைக் கொண்டு கிருமிநாசினிகளை விசிறும்போது, கிருமிநாசினிகள் விசிறுவதைத் தன் தொழிலாகக் கொண்டிருந்த மனிதன் இனி என்னவாவான்? அவனின் தொழில் இனி என்னவாகும்? இந்தத் தொழிலிழப்புக்குப் பதில் சொல்லவேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கில்லையா?

மேற்கு நாடுகளில் ட்ரோன்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது, விவசாய நிலங்களின் நிலப்பரப்பு அதிகரிக்கப்பட்டது. 'மனிதனும் - இயந்திரமும் இணைந்த வேளாண்மை' என்பதே அங்கு கருப்பொருளாகவும் தொனிப்பொருளாகவும் இருந்தது. விவசாயநிலப்பரப்பு அதிகரிக்கின்றபோது மனிதவலு நிச்சயம் தேவை. ஆதலால் அங்கு தொழிலிழப்புகள் அவ்வளவாக ஏற்படவில்லை. மாறாகத் தொழில் மாற்றங்களே ஏற்பட்டன. இதன் விளைவாக உற்பத்தி பெருகியது, ஏற்றுமதி அதிகரித்தது. ஆதலால், இவ்வாறான செயற்றிட்டங்கள்தான் வடக்குக்குத் தேவையே அன்றி மனித வலுவின் அவசியத்தை பூச்சியத்துக்குக் கொண்டு வரும் செயற்றிட்டங்கள் அல்ல. ட்ரோன்களை மட்டுமல்ல உலகில் உள்ள அத்தனை தொழில்நுட்பங்களையும் கொண்டுவாருங்கள். விவசாயத்தை மேம்படுத்துங்கள். ஆனால், ஒரு மனிதனை அவனை நம்பியுள்ள குடும்பத்தின் பசியை அந்த இயந்திரம் ஆட்கொண்டு விழுங்கிவிட அனுமதித்துவிடாதீர்கள். 'மனிதனையும் இயந்திரத்தையும் இணைந்தாற்போலான விவசாயத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு மேம் படுத்துங்கள்'. ஏனெனில் அதற்குப் பெயர்தான் அபிவிருத்தி.



# ஊடக சுதந்திரத்தில் இலங்கை தரமிறக்கம்

**கொழும்பு, மே 5**

**உலகில் ஊடக சுதந்திரத்தைப் பேணும் நாடுகளில் இலங்கை தரமிறக்கப்பட்டுள்ளது. ஊடக சுதந்திர குறிகாட்டியின் பிரகாரம் 180 நாடுகளின் வரிசையில் 150ஆவது இடத்தை இலங்கை பிடித்துள்ளது.**

உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பால் இந்த ஆண்டுக்கான ஊடக சுதந்திர குறிகாட்டியை அடிப்படையாகக்கொண்டு வரிசைப்படுத்தப்பட்ட 180 நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் கடந்த ஆண்டு 45.85 புள்ளிகளுடன் 135ஆவது இடத்தில் இருந்த இலங்கை, இந்த வருடம் 35.21 புள்ளிகளுடன் 150ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் ஊடகத்துறையானது அரசியல் தரப்புகளில் பெரிதும் தங்கியிருப்பதாகவும், ஊடகத்துறை இன்னமும் அச்சுறுத்தல்மிகு நிலையிலேயே இருப்பதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் இன்னமும் ஊடகத்துறை மீதான அரசியல் ரீதியான துருவமயப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்வதாகவும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## டெங்கு 22,443!



கொழும்பு, மே 5

வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 22 ஆயிரத்து 443 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. அவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## கொத்து, ரைஸ் விலை குறைப்பு

கொழும்பு,மே 5

கொத்துரொட்டி மற்றும் ப்ரைட் ரைஸ் என்பனவற்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்படுகின்றது என்று இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. எரிவாயுவின் விலைக் குறைப்புக்கேற்ப இந்த விலைக்குறைப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. (ச-555)

## விளையாட்டுத்துறை; சீரமைக்க நடவடிக்கை

நாட்டின் விளையாட்டுத்துறை அரசியல்மயப்படுத்துவதைத் தடுப்பதற்காக விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஒழுங்குமுறையை உத்தியோகபூர்வமாக மாற்றும் வகையிலான ஆவணத்தில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கையெழுத்திட்டுள்ளார். அதற்கமைய 73 வகையான விளையாட்டுத்துறை சங்கங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புகள் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

தேர்தல் கண்காணிப்பு

## ஆளும் கூட்டுக்கு பா.ஜ.க. அழைப்பு

இந்திய மக்களவைத் தேர்தலில், கண்காணிப்பாளராகச் செயற்படுவதற்காக ஆளும் பா.ஜ.க.வால் இலங்கையின் பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இந்தியத் தேர்தல் நடைமுறைகள் பற்றிய புரிதலை வழங்குவதற்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அந்தவகையில் பத்து நாடுகளில் உள்ள பதினெட்டு பிரதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர். (ச-6)

### நாளை

06.05.2024

**திங்கட்கிழமை**

**சித்திரை - 23**

சுபநேரம் : 11.56 - 01.26

ராகுகாலம் : 07.26 - 08.56

### நாளொரு நல்வார்த்தை

**ஒன்று முக்கியமென்றால்,<br>தோல்விக்கே அதிக வாய்ப்பு<br>எனத் தெரிந்தாலும் அதை நீங்கள்<br>செய்யவேண்டும்.**

**- எலான் மஸ்க்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் செயற்றிட்டம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரைகளை ஆற்றினார். (ம)

# எனது ஆட்சியில் அடுத்த மேதினம்



## அநுர உறுதிபடத் தெரிவிப்பு

**கொழும்பு, மே 5**

**முதலாளித்துவ வர்க்கத்தின்கீழ் இடம்பெறும் இறுதி மேதினக் கூட்டம் இதுவாகவே இருக்கும். அடுத்த மே தினக்கூட்டம் ஜே.வி.பி.யின் அரசாங்கத்தின் கீழேயே நடைபெறும் என ஜே.வி.பி.யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க கூளுரைத்துள்ளார்.**

ஜே.வி.பி.யினரின் மேதினக் கூட்டம் கொழும்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டபோதே அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் துறைசார் கட்டமைப்புகளைப் பலப்படுத்தி வருகின்றது. எதிர்காலத்தில் சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், பெண் பிரதிநிதிகள், மதத்தலைவர்களுக்கான மாநாடுகளை நடத்த நாம் ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அது மட்டுமல்ல, புலம்பெயர் இலங்கையர்களுடன் பல சந்திப்புகளை நாம் முன்னெடுத்துள்ளோம். வேறு எவரும் முன்னெடுக்காத வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம்.

இவை அனைத்தையும் தாண்டி சகல மக்களையும் எம்முடன் இணைத்துக்கொள்ளவேண்டும். ஏனைய கட்சிகளை இவ்வளவு காலம் நம்பியிருந்த அனைவரையும் நாம் ஒன்றிணைக்க வேண்டும். ஆனால், தற்போது சகல மக்களுக்கும் எம்மீதான நம்பிக்கை உருவாக ஆரம்பித்துவிட்டது. அதற்கு இன்றைய கூட்டம் நல்லதொரு உதாரணமாகும். நாம் எந்தவொரு நபருக்கும் எதிராக எம்மை உருவாக்கவில்லை, இது சகல மக்களையும் ஒன்றிணைத்து புதிய ஆட்சியை, புதிய யுகத்தை நோக்கிய பயணமேயாகும். அதனையே நாம் உருவாக்கப்போகின்றோம். உலகை வெற்றி கொள்ளும் பலமான நாடாக நாம் உருவாகவேண்டும். அதற்காக சகல மக்களும் கட்சி பேதங்களை வேண்டும் - என்றார். (ம)



புங்குடுதீவில்

## கண்டல் தாவரங்கள்; சொல்ஹெய்ம் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 5

வடக்குக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், புங்குடுதீவுக்கு களப்பயணம் மேற்கொண்டு கண்டல் தாவரங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.

கண்டல் தாவரங்களினால் இயற்கையாக அமைந்த நன்மைகள், மண்டைதீவில் கண்டல் தாவரங்களின் பரம்பல் ஆகியவை தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தினார்.

அத்துடன் வெள்ள இடரைத் தவிர்க்கவும், நீர்வாழ் உயிரினங்களின் பெருக்கத்தை அதிகரிக்கவும் கண்டல் தாவரங்களின் பங்களிப்பை அதிகரிக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்தார்.

களப்பயணத்தில் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸும் உடனிருந்தார். (ச-26)



## பாத யாத்திரை

மன்னார், மே 5

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் மன்னாரைச் சேர்ந்த 20பேர் மன்னார் - செல்வநகர் அம்பாள் ஆலயத்திலிருந்து கடந்த புதன்கிழமை யாத்திரையை ஆரம்பித்துள்ளனர். எதிர்வரும் 20 ஆம் திகதி காலை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை சென்றடைந்து தமது விரதத்தை பூர்த்தி செய்யவுள்ளனர். (ஒ-56)



'பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களின் ஊடாக அமைதி மற்றும் உள்ளடங்கலான தாங்குதிறன்மிக்க சமூகங்களை மேம்படுத்தல்' எனும் தொனிப்பொருளின் கீழான நிகழ்ச்சித் திட்டம் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியில், கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில், புங்கங்குளம் சந்தியிலுள்ள தனியார் விடுதியில் அண்மையில் நடைபெற்றது. (ப-159)

அரியாலை கில்லாடிகள் விளையாட்டுக் கழகத்தின் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள், விளையாட்டுக் கழகத் தலைவர் குகதாஸ் தலைமையில் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளைத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன், அரியாலை கில்லாடிகள் விளையாட்டுக்கழக வீரர்கள், துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி வீரர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ப-125)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர் போஷாக்கின்மைக்கு காரணம் வறுமை அல்ல

## வேலணை பிரதேச செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 5**

**மாணவர்களிடையேயான போஷாக்கின்மைக்கு வறுமை ஒருபோதும் காரணமாக இருக்காது. அவர்கள் உண்ணும் உணவின் தரங்கள் அல்லது பழக்கங்கள் தான் அதற்கு முழுமையான காரணங்கள் - என்று வேலணை பிரதேச செயலாளர் கைலாயபிள்ளை சிவகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வேலணை மத்திய கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

வேலணை பிரதேசத்தின் மாணவர் இடையே போஷாக்கு மட்டத்தை அறிந்து கொள்ளும் வகையில் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெளியான தகவல் எம்மை ஆச்சரியமடைய செய்துள்ளது.

அந்த ஆய்வின்படி பாதிக்கப்பட்ட 90 வீதத்துக்கும் அதிகமான பிள்ளைகளின் பெற்றோர் வறுமைக்கோட்டின் கீழ் அல்லாத நிரந்தர வருமானம் கொண்டவர்களாகவும் பணம் படைத்தவர்களாகவுமே இருந்துள்ளனர். அவர்களது உணவுப் பழக்கவழக்கங்களே போசாக்கற்ற நிலைக்கு முக்கியமான காரணமாகும்.

பிள்ளைகளின் ஆரோக்கியத்தை வளர்க்க பெற்றோர் தமது அவசர உணவு பழக்க வழக்கத்தில் மாற்றத்தை கொண்டு வருவது அவசியமாக உள்ளது - என்றார். (ஒ-27- 125)

## வேதனம் ரூ.1700 முதலாளிகள் எதிர்ப்பு

கொழும்பு, மே 5

தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு குறித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் முன்மொழிவுகளுக்கு முதலாளிமார் சம்மேளனம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. நாளாந்தச் சம்பள அதிகரிப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. இந்தநிலையில் வர்த்தமானி அறிவிப்பு தொடர்பாக அரச அதிகாரிகளின் அறிக்கைகளும் கையாளும் விதமும் சம்பள அதிகரிப்பு குறித்து. தொழிலாளர்கள் மத்தியில் தேவையற்ற அவநம்பிக்கையை ஏற்படுத்தும். உத்தேச புதிய சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதற்கான திகதி அல்லது அதிகரிக்கப்பட்ட சம்பளத்தொகை இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இதுதொடர்பில் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை. வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு முடிவு தொடர்பான ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மே 15 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## நூதனத் திருட்டு

யாழ்ப்பாணம், மே 5

சாவகச்சேரி புத்தூர் வீதி மட்டுவில் வடக்குப் பகுதியிலுள்ள பலசரக்கு விற்பனை நிலையத்தில் பொருள்களை கொள்வனவு செய்த நபரொருவர் அதற்கான பணம் கொடுக்காது அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விற்பனை நிலைய உரிமையாளரால் சாவகச்சேரி பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-131)



'சமூக அபிவிருத்திக்கான கலாசார இளையோரின் ஒன்றிணைவு' எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு. கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில், மாந்தை மேற்குப் பிரதேசசபை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு உதவிப் பிரதேச செயலாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர், நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-56)

## 5 கோடி ரூபா பெறுமதி போதைப்பொருள் மீட்பு

கொழும்பு, மே 5

5 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்களுடன் சந்தேக நபரொருவர் கொழும்பு பாமன்கடை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் சிக்கினார்.

சந்தேகநபரிடமிருந்து 2 கிலோகிராம் நிறையுடைய கொக்கெய்ன் மற்றும் ஹாஷ் மற்றும் குஷ் உள்ளிட்ட பல போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. மீசாலையைச் சேர்ந்த கணேசன் சிவபாக்கியம் நினைவாக அவரது குடும்பத்தினரால் இந்தச் சரஸ்வதி சிலை நிர்மாணிக்கப்பட்டது. (ச-9)

## டெங்கை ஒழிக்க கோரிக்கை



**யாழ்ப்பாணம், மே 5**

**இந்த வருடத்துக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், சில பரீட்சை நிலையங்களில் டெங்கு பரவும் சூழல் காணப்படுவதாகவும் அவற்றை துப்புரவு செய்யுமாறும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களிடமும் பாடசாலை நிர்வாகத்தினரிடமும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ப-6)**

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் மேதின ஒன்றுகூடல் நிகழ்வு, உரும்பிராயில் அமைந்துள்ள கிராமிய உழைப்பாளர் சங்க அலுவலகத்தில் கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பம் தலைமையில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. (ப-66)



## விமானநிலையத்தில் நகைக்கடைகள்

கட்டுநாயக்க விமானநிலையத்தில் நகைக்கடைகள் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை காலமும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நகைக்கடை அமைக்கப்படவில்லை. சர்வதேச அளவில் கேள்விப்பத்திரம் கோரியே நகைக்கடை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் நாட்டை விட்டு வெளியேறுவோரும் தரித்துச்செல்லும் பயணிகளும் நகைகளைக் கொள்வனவு செய்து கொண்டு செல்ல முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு அகராதியை கொடுத்தது யாழ்ப்பாணம்

## உலக சிலம்பத் தலைவர் சுதாகரன் யாழில் பெருமிதம்




யாழ்ப்பாணம், மே 5

உலகில் தமிழுக்கு அகராதியை கொடுத்த இடம் யாழ்ப்பாணம் என்பதில் தான் பெருமை அடைவதாக உலக சிலம்பம் சங்கத்தின் தலைவர் முனைவர் சுதாகரன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார். சர்வதேச சிலம்பம் தொடரை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம்தான் தமிழருக்கு அகராதியைக் கொடுத்த இடம். இங்கு பேசுகின்றதமிழ்தூய்மை யான செமுமையான தமிழ். அதையிட்டு நான் பெருமை அடைகிறேன். அவ்வாறான ஓர் இடத்தில் உலக சிலம்பம் சங்கத்தின் உறுப்பினர்களும் வெளிநாட்டு மாணவர்களும் இணைந்து எமது பாரம்பரிய கலைப் போட்டியை நிகழ்த்து கின்றமை பெருமைக்குரிய விடயம் - என்றார். (ம-27)



## குருதிக்கொடை

வவுனியா,மே 5

வவுனியா பொது மருத்துவமனையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் குருதிக் கொடை முகாம் ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (ம-18)

★★★★

இளவாலை, மே 5

விதையனைத்தும் விருட்சமே இளைஞர் அணியினருடன் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு, சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை நடைபெறவுள்ளது. (ப-66)

★★★★

குருநகர், ஜேம்ஸ் வோரியர்ஸ் சமூக முன்னேற்றக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுக் கழக இளைஞர்கள் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு, குருநகர் கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கி ழமை காலை 9 மணி முதல் பி.ப. 2 மணி வரை நடைபெறவுள்ளது. (ப-66)

## பொதுக்கூட்டம்

ஏழாலை, மே 5

தம்புவத்தை ஞானவைரவர் ஆலய சித்திரை மாதப் பொதுக் கூட்டம், ஆலய முன்றலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற வுள்ளது. (ப-6)


## வாடகைக்கு வீடு தேவை

கொழும்பைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுபவருமாகிய எனக்கு சிறிய Annex அல்லது **சிறிய வீடு** அல்லது **தனி அறை வாடகைக்குத் தேவை.**

யாழ்ப்பாணம் முதல் சுன்னாகம் வரையிலான பிரதேசத்தில் K.K.S வீதிக்கு அருகில் உள்ள குடியிருப்பு வீடு விரும்பத்தக்கது. தர விரும்புவோர் தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாக எனக்கு விபரங்களை தெரிவிக்கவும். (CS/54895) J-1

WA (அல்லது) அழைப்பு **071 660 8237**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பருத்தித்துறை நகரத்திலிருந்து 850m தூரத்தில் அவ்வோலையில் அமைந்துள்ள **8.5** பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- CLEAR TITLE
- நன்னீர் ஊற்றுடன் கூடிய நிலப்பரப்பு
- பருத்தித்துறை நகரத்திலிருந்து 850m தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- 50 தென்னை மரங்களுடன் கூடிய காணி



**பார்வையிடும் நேரம் காலை 9 மணி முதல் மலை 5 மணி வரை**

GOODWIN

தொடர்புகளுக்கு : **0766800438**


## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 01 . 1938



மறைவு 02 . 05 . 2024

### விநாயகமூர்த்தி சின்னம்மா

**(பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரி)**

பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட விநாயகமூர்த்தி சின்னம்மா அவர்கள் 02.05.2024 வியாழக்கிழமை அன்று இயற்கை எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் விநாயகமூர்த்தியின் (லொறி உரிமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - விசாலாட்சி தம்பதியரின் மருமகளும், யுகேந்திரன், காலஞ்சென்ற ரவீந்திரன், மற்றும் இந்திரவதனி (பிரான்ஸ்), இந்திராணி (லண்டன்), இந்திராகாந்தி (கனடா), காலஞ்சென்ற இராஜேந்திரன், மற்றும் இந்திராதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், இந்திராணி (ஓய்வுநிலை கமநல உத்தியோகத்தர் முள்ளியவளை), கௌரி, மனோகரன் (பிரான்ஸ்), திருச்செல்வம் (லண்டன்), தெய்வேந்திரராஜா (கனடா), கிருஷ்ணமேனன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஜிந்தன், சுரேன் + அனுஷா, தனுஷா + கர்ணன், லனித்தா, லக்ஷன், லனுஷன், பிரகலாதன், துவாரகன், கரிஷ்ணவி, கணான், சரண், கிரிஷ்ணவி, மிதுனவி, கிருஷாங் ஆகியோரின் பேர்த்தியாரும், ஜிஸ்மிதா, காஸ்மீரன், மேனுஜன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பாடசாலை வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல்:
யுகேந்திரன்
குடும்பத்தினர்

0) J-1


## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் உள்ள கடை ஒன்றில் வேலை செய்வதற்கு (Sales) பெண்கள் தேவை.

தகுந்த சம்பளத்துடன் Commission ம் வழங்கப்படும். (CS/54896) J-1

தொடர்பு:- **077 748 0357**

## மதுரா அழகுக்கலை கல்லூரி அழகு நிலையம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம், பதிவு 10.05.2024**

**அழகுக்கலைக் கல்வி சேர்ட்டிபிக்கேற், டிப்ளோமா, அட்வான்ஸ் டிப்ளோமா,** 20% கட்டணக் கழிவு

**மாஸ்ரர் டிகிரி.**NVQ 3 **பாடநெறி, சலூன் மனேச்மன்ட் மேலும் ஆரிவேக், பஷன் டிசைனிங், கேக் ஐசிங்** ஆகிய கற்கை நெறிகள் வழங்கப்படும். **(மகளிர் மட்டும்) பயிற்சிக் காலம் 3 மாதங்கள்.** பயிற்சியின் நிறைவில் பதிவு செய்யப்பட்ட இன்றநேஸ்னல் சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்பு:- **077 936 2642**
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இருபாலைச் சந்தி,
கோப்பாய், யாழ்ப்பாணம்.

## Jaffna College - Vaddukoddai Vacancies

Jaffna College is a prestigious and long standingprivate school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for passionate, dynamic, inspirational and hard-working individuals for the following positions.

Hostel Sub wardens – Male and Female

Requirements

- The ability to liaise with parents/guardians on a need basis.
- The skills to supervise and encourage studies of students, enforce discipline and a code of conduct as per school policies and regulations.

Accommodation and food provided.

**Accountant**

**Requirements**

- **AAT qualified or CIMA/Charted partly qualified**
- **Familiarity with accounting software**
- **Minimum 3 years' experience**

**Closing date for applications17.05.2024**

**Applications with the names of two non-related referees should be sent to hr@jaffnacollege.lk**

**Only short listed candidates will be called for an interview.**

**Principal**

(cr.42356) (N-1)

## பரராஜசிங்கம் தோட்டம்

## வேலைக்கு ஆட்கள் தேவை



**முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் அமைந்துள்ள பரராஜசிங்கம் தோட்டத்திற்கு தோட்ட வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.**

நாளாந்த 8 மணி நேர சம்பளம் 2000/= ஆகும். தங்குமிட வசதி செய்து தரப்படும் மற்றும் மாதத்தில் 22 நாளுக்கு கூடுதலாக வேலை செய்பவர்களுக்கு உணவு கொடுப்பனவு மாதாந்தம் 5000/= வழங்கப்படும். மேற்படி தொடர்புகளுக்கு

**077 869 3005, 077 151 6761**

(CS/54934) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் நவீன திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில் நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது
**இணைப்ப நவீன திருமண சேவை.**
ஏராளமான **உள்நாட்டு** மற்றும் **வெளிநாட்டு** வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி.
தொடர்பு கொண்டு
**உங்கள் துணையை தெரிவு செய்ய முடியும்.**
பதிவுக் கட்டணம் இல்லை.
**இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்.**
Ts & Cs apply.
www.inaipa.com
(CS/54910) J-1

## வாடகைக்கு உண்டு

நல்லூரில் பெண் பிள்ளைகளுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு. (CS/54915) J-1
தொடர்பு:- 076 667 4454

## மணமகள் தேவை

1993 யாழ். இந்து (V)
வங்கி முகாமையாளராக கடமையாற்றும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
077 854 7911

## UNIVERSITY COLLEGE OF JAFFNA
## UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
Ministry of Education

## VACANCY

Applications are invited from suitable qualified persons for the below mentioned post in University College of Jaffna.

### Assistant Bursar

**Closing Date: 05.06.2024**
FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT
www.ucj.ac.lk or call **021 221 7792**

CEO/ Director
University Collcge of Jaffna.
05.05.2024

# விற்பனைக்கு



**JCB 3CX**
மற்றும் **3DX**
பெக்ஹோ
இயந்திரங்களுக்கான
Bucket Tooth, Side Cutters,
Cutting Edges மற்றும் Nut & Bolts
விற்பனைக்கு.
இன்றே அழையுங்கள் - **076 310 7534**
(CS.28469) (n-1)

## Jaffna College - Vaddukoddai
## Vacancies

Jaffna College is a prestigious and long standingprivate school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for energetic, self-motivated and hard-working individuals to join the staff team for the following positions.

**1. Cricket Coach**

Requirements:
- possess the minimum Level I qualification with 3 years' experience.
- be an individual with strong values such as honesty, integrity, sportsmanship and work ethics.
- be computer literate.
- be able to work with the college administration in developing cricket at Jaffna College.

**2. Health and Physical Education teacher**

Requirements
- Academic Qualifications: Bachelor of Sports Science (B.Sc.).
- Classes to handle: Grade 6 to 11
- Language Proficiency: Fluency in both English and Tamil, with the ability to con duct classes in both languages.

Applicant should be
- be able to coach sports at Jaffna College.
- be an individual with strong values such as honesty, integrity, sportsmanship and work ethics.
- be computer literate.

Closing date for applications 10.05.2024
Applications with the names of two non-related referees should be sent to **hr@jaffnacollege.lk**
**Only short listed candidates will be called for an interview.**
Principal
(cs.42357) (N-1)


# இறக்குமதி நிபந்தனைகளை மீறி சொக்லெட் விற்றமைக்குத் தண்டம்

மானிப்பாய் ஆனைக்கோட்டைப் பகுதியில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் அல்லாமல் சட்டத்துக்குப் புறம்பாக வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட சொக்லெட்களை வணிகம் செய்த நிறுவனங்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. ஆனைக்கோட்டைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கு.பாலேந்திரகுமார் மற்றும் கி. அஜந்தன் தலைமையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த முறையற்ற வர்த்தகம் கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-26)


## ST. JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancies:

- **Teacher - Engineering Technology - A/L**
- **Computer Hardware Technician**

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post, to reach us before 17th May 2024 to the address below.

Please mention the post you are applying for on the top left hand corner of the envelope.

Only shortlisted candidates will be called for an interview.

**The Principal**
**St. John's College**
**Jaffna**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**இன்றே இணைந்துகொள்ளுங்கள்!**
**ஐடியல் / பர்ஸ்ட் சாய்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**
- திறமையான ஆட்டோமொபைல் ஏசி & எலக்ட்ரிக்கல் டெக்னீஷியன்
- திறமையான ஆட்டோமொபைல் டிங்கர்
- திறமையான ஆட்டோமொபைல் பெயின்டர்

**சிறந்த ஊதியம் மற்றும் நன்மைகளுக்கு எங்களுடன் இணையுங்கள்!**
தொடர்புக்கு: **077 589 1288**
**CVகளை இம் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்:**
careers@idealgroup.lk
முகவரி: இல. 63, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்குத் தேவை

கந்தர்மடம், நல்லூர் மற்றும் யாழ் நகரை அண்டிய பகுதியில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத்தேவை.
077 262 7890, 076 705 8399

## வேலையாள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல விநியோக விற்பனை நிலையத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
077 668 1670

## வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் இயங்கி வரும் பலசரக்கு கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
077 036 6388

## நல்லூரில் வீடு விற்பனைக்கு

யாழ். நல்லூர் முத்திரைச் சந்திக்கு அருகாமையில் சுற்று மதிலுடன் கூடிய 1 1/2 பரப்புக் காணியில் இரண்டு அறைகளுடன் கூடிய வடக்கு வாசல் வீடு அமைதியான சூழலில் விற்பனைக்கு உண்டு. (CR/42335) J-1
074 240 9637, 077 933 7329

**காரைநகர் அபிவிருத்திச் சபையின் 11.02.2024ம் திகதி நடைபெற்ற விஷேட பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட புதிய யாப்பின் பிரகாரம் நடைபெறும் புதிய நிர்வாகசபையை தெரிவு செய்வதற்கான 2வது பொதுக் கூட்டம்**

| | | |
|---|---|---|
| தலைமை | : | திரு.விஸ்வலிங்கம் ஹம்சன் (காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர்) |
| இடம் | : | காரைநகர் பிரதேச கலாசார மண்டபம் வலந்தலைச் சந்தி, காரைநகர். |
| காலம் | : | 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை |
| நேரம் | : | காலை 9.30 மணி |

**குறிப்பு :**
புதிய யாப்பின் பிரகாரம் 15.02.2024ம் திகதி வரை இணைந்து கொண்ட ஆயுட்கால மற்றும் 2024ம் ஆண்டு சந்தா செலுத்திய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு புதிய நிர்வாகசபை தெரிவில் பங்கேற்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காரைநகர் அபிவிருத்திச் சபை
சின்னாலடி, காரைநகர்
தொலைபேசி: 021-221 1757
05.05.2024

பொன்னம்பலம் பரந்தாமன்
செயலாளர்
(cs.54931) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சமடைந்து ஓடவேண்டாம்!

## ராகுல் காந்தியை சீண்டுகிறார் மோடி

இந்திய மக்களவைத் தேர்தலில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அமேதியில் வேட்பாளராகக் களமிறங்க ராகுல் காந்தி பின்னடித்துள்ள நிலையில், 'அச்சப்பட்டு ஓடவேண்டாம்' என ராகுல் காந்தியை சீண்டியுள்ளார் பிரதமர் மோடி.

இந்திய மக்களவைத் தேர்தல் தற்போது இடம்பெற்று வருகின்றது. இந்தத் தேர்தலில் காங்கிரஸின் முக்கியமான தலைவர் ராகுல் காந்தி அமேதியில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் ரேபரேலி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதனை பா.ஜ.க. கடுமையாக விமர்சித்து வருகிறது. இந்த நிலையில், மேற்கு வங்கத்தில் ஒரு பரப்புரைக் கூட்டத்தில் ராகுல் காந்திக்கு எதிராக சரமாரியான விமர்சனத்தை மோடி முன்வைத்துள்ளார். 'வயநாட்டில் தோற்றுவிடுவோம் என்ற பயத்தால் இளவரசர் போட்டியிட வேறு தொகுதியைத் தேடிக் கொண்டிருக்கிறார் என நான் ஏற்கனவே சொல்லியிருந்தேன்.

இப்போது அமேதியிலிருந்து ஓடிப்போய் ரேபரேலியை அவர் தேர்வு செய்துள்ளார். இவர்கள்தான் ஊர் ஊராகச் சென்று அஞ்சாதீர்கள் எனப் பிரசாரம் செய்பவர்கள். நான் அவர்களுக்கு அதையே திருப்பிச் சொல்கிறேன். அச்சப்பட்டு ஓடாதீர்கள்' என்று மோடி தெரிவித்துள்ளார். (ம)


## மாபெரும் வேலை வாய்ப்பும் கருத்தரங்கும்

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் அரியதோர் சந்தர்ப்பம். நிரந்தர வேலைவாய்ப்பு தேடும் நபரா நீங்கள் எம்மிடம் 100 இற்கு மேற்பட்ட வேலைகள் உள்ளன இது தொடர்பாக கருத்தரங்குகளும் தீர்வும் மற்றும் குறைந்த காலப்பகுதியில் பட்டதாரி ஆவதற்கான வழி காட்டலும் தீர்வும்.

**குறிப்பு:**

**கருத்தரங்கு நடைபெறும் இடம் Tilko Hottel**
**திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

**தொடர்பு: 070 508 8241**

(CS 411) V-1


# பேருந்து விபத்து; 20 பேர் இறப்பு

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தொன்றில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். ராவல்பிண்டியில் இருந்து கில்கிட் நோக்கி சென்ற பேருந்து கில்கிட் நெடுஞ்சாலையில் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்ததிலேயே இந்தத் துயரம் இடம்பெற்றுள்ளது. (ம)

# தமிழகத்தில் வெப்ப அலை

தமிழகத்தில் முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு வெப்ப அலையில் தாக்கம் அதிகரித்துள்ளது என்றும், தண்ணீர்ப் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்துமாறு தமிழக வளிமண்டலவியல் திணைக்க ளம் அறிவுறுத்தியுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 02 . 1950



மறைவு 03 . 05 . 2024

### மாணிக்கம் ஸ்ரீரஞ்சிதமலர் (பவா)

(ஓய்வுநிலை பிரதேச சபைச் செயலாளர் வலி. வடக்கு மல்லாகம், ஓய்வுநிலை நிர்வாக அதிகாரி வலிகாமக் கல்வி வலயம்)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் ஸ்ரீரஞ்சிதமலர் கடந்த (03.05.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற கந்தமுத்து - நல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற விநாயகன் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், லயன் விநாயகன் மாணிக்கம் (ஓய்வுநிலை அதிபர் யாழ். கனகரெத்தினம் ம.ம.வித்தியாலயம், ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் சுகன்யா (உஷா - கனடா), சகிலேந்திரா (கண்ணா - லண்டன்), காலஞ்சென்ற லாவண்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜ்பவன் (சுரேன் - கனடா), பிருந்தா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், ரக்ஷன்யா, அகன்யா, தீக்ஷிதன், நிகித்திரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அமரர் ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் ஸ்ரீரஞ்சினி, சறோஜினி, ஸ்ரீபத்மினி, ஸ்ரீவையந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புளோரா, அமரர்களான விநாயமூர்த்தி, முருகையா, குணரெத்தினம் மற்றும் துரைசிங்கம் ஆகியோரின்மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 614/3, K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் நாளை (06.05.2024) திங்கட்கிழமை நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

614/3, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்

T.P: 077 6057 490

(CS 407)

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 04 . 1963



மறைவு 03 . 05 . 2024

### குட்டித்தம்பி முருகையா

(யாழ். மாநகரசபை ஓய்வுபெற்ற நூலகர்)

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி முருகையா கடந்த 03.05.2024 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - கனகம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற ராசரத்தினம் மற்றும் ஜோதிமலர் தம்பதியரின் மருமகனும், பத்மமாலாவின் பாசமிகு கணவரும், விந்துஜா, பிரதீப், சுரேஷ், மேரி அனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்தரூபன், தாரணி, யோசுவா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யேரோமி, சஜீந், ஜெஸ்மன், ஜெசரகியா, லாசிப்பிரியா, மேசியன், ஜெக்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கொட்டைக்காடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

077 4766 229
077 7684 856

(CS 54946)A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 11 . 1949



மறைவு 04 . 05 . 2024

### தம்பிஜயா சரஸ்வதி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா சரஸ்வதி நேற்று (04.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா-இரத்தினம் நாகம்மாவின் மூத்த புதல்வியும் மலர் (கனடா), கணேசலிங்கம் (கனடா), கணேசமூர்த்தி (ஓய்வு பெற்ற உடுவில் பிரதேசசபை உத்தியோகத்தர்), கணேசநாதன் (கனடா), ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சண்முகலிங்கம் (கனடா), கிரிஜா (கனடா), இராஜேஸ்வரி, ஞானரூபி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், ஜெயநந்தன், பரந்தாமன், ஜலஜா, ஆகியோரின் பெரியம்மாவும், சுயனி, திலக்சன், சிந்துஜா, சிந்துஜன் தயாபரன், ரேகா, மதுரா ஆகியோரின் மாமியாரும் ஸ்ரீபன், அகல்யா ஆகியோரது பெரியதாயாரும், ஜஸ்மின், யைதன், றிச்னன், நிலவேணி, ஜெய் ஓம்காரன், லஸ்வின், அஸ்விகா, ஆதேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.05.2024 (ஞாயிற்றுக்கிழமை) பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டி வளவு வீதி
இணுவில் மேற்கு

(CS 408) V-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## எல்.பி.எல். ஏலம்!

கொழும்பு, மே 5
லங்கா பிறீமியர் லீக் தொடரின் ஏலம் இந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற வுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு அணியும் குறைந்தது 24 வீரர்களைக் கொண்டிருக்க வேண்டும், ஆறு வெளிநாட்டு வீரர்களைக் கொண்டிருக்க வேண்டும், இளம் வீரர்களின் வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக ளின் அடிப்படை யில் ஏலம் நடைபெறவுள் ளது. (ம-6)

## சிறி சபாரத்தினத்தின் நினைவுதினம் இன்று!

யாழ்ப்பாணம், மே 5
ரெலோ இயக்க முன்னாள் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 38 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் அன்னங்கை பகுதியில் ரெலோ இயக்க தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் ஜனா கருணாகரம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோ ரின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளது. தொடர்ந்து ரெலோ அலுவ லகத்தில் அஞ்சலிக் கூட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-125)

## காலாவதிப் பொருள்கள் 50ஆயிரம் ரூபா தண்டம்

சித்தன்கேணிப் பகுதியில் சுகாதாரமற்ற உணவு விற்பனை மற்றும் உணவு கையாள்கையில் ஈடு பட்ட நிறுவனங்களுக்கு எதிராக 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
கடந்த இரண்டாம் திகதி சித்தன்கேணிப் பகுதியில் சித்தன்கேணி பிரிவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கை களின்போதே சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய வர்த்தக நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டது. வழக்குகள் அன்றையதினமே விசார ணைக்காக எடுக்கப்பட்டன. வர்த்தக நிலையங்க ளின் உரிமையாளர்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டதையடுத்து அனைவருக்கும் மொத்தமாக 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பிரிட்டன் வழங்கிய ஆயுதங்களால்

# ரஷ்யாவை ஊடுருவி தாக்க அனுமதியாம்

கீவ், மே 5

**பிரிட்டன் வழங்கிய ஆயுதங்களால், ரஷ்ய எல்லைக்குள் தாக்குதல் நடத்துவதற்கு உக்ரைனுக்கு பிரிட்டன் அனுமதி வழங்கியுள்ளது.**

உக்ரைனின் தலைநகர் கீவுக்குச் சென்றுள்ள பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரூன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனைப் பலப்படுத்துவதற்காகவும் உக்ரைனின் போராட்ட வேகத்தை அதிகப்படுத்துவதற்காகவும் ஆண்டுக்கு 3 ஆயிரம் கோடி பவுண்டுகள் பெறுமதியான உதவிகளை வழங்க பிரிட்டன் தீர்மானித்துள்ளது என்றும் இதன்போது டேவிட் கமரூன் தெரிவித்தார்.

பிரிட்டனால் வழங்கப்பட்டுள்ள ஆயுதங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் உக்ரைன்தான் இனி முடிவெடுக்க வேண்டும். இதுவரை ரஷ்யத் தாக்குதல்களை முறியடிப்பதற்காகவும் உக்ரைனின் எல்லைகளைக் காப்பதற்காகவுமே ஆயுதங்கள் வழங்கப்பட்ட நிலையில் தற்போது ரஷ்ய எல்லைக்குள்ளும் பிரிட்டனின் ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கமரூன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## மாணவர்களுக்கு நோய்த் தடுப்பூசி

சாவகச்சேரி, மே 5

தரம் - 7 மாணவர்களுக்கு ஏற்பு மற்றும் தொண்டைக் கரப்பான் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் நடவடிக்கை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பாடசாலை ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரப் பகுதி பாடசாலைகளின் மாணவர்களுக்குத் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் இடம்பெற்றன. (ச-9)


## சேல்ஸ் லொறி வாடகைக்கு விடப்படும்

விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடிய 14 அடி நீள கூலர் ரக Sales Lorry மாத, வருட அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 644 2982

## 1ம் ஆண்டுத் திவச அழைப்பு

தோற்றம் 06 . 05 . 1976

மறைவு 17 . 04 . 2023



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த (17.04.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தலைவர்

### அமரர் குலசேகரம்பிள்ளை ராஜ்மோகன்

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி வீதி,
திருநெல்வேலி.

(CS 421) V-1

குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்



தோற்றம் 02.06.1938

மறைவு 01.05.2024

எமது கல்லூரி ஆசிரியர்
**ந.விபுலன்**
அவர்களின் பாசமிகு தாயார்

### நற்குணராசா மனோன்மணி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி
ஆசிரியர் நட்புறவுக் கழகம்

(CS/54938) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 05 1951

மறைவு 04 05 2024



### Dr. பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரன்

யாழ்ப்பாணம், நீராவியடியை பிறப்பிடமாகவும், இணுவில் வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் Dr. பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரன் அவர்கள் **04.05.2024** சனிக்கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்ரமணியம், கமலம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சிதம்பரநடராஜா, மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், கௌரி அவர்களின் பாசமிகு கணவரும், பிரசன்னா (சுவிஸ்), பிரணவனின் அன்புத் தந்தையும் செல்லா, சாத்விகா அவர்களின் அன்பு மாமனாரும், பிரயனின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிறிரங்கநாதன், நாகேஸ்வரன், துரைசிங்கம், சரஸ்வதி, சிறிகாந்தன், சிறிரஞ்சினி அவர்களின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **Mahinda Parlour, Mount Lavinia** இல் **05.05.2024** ஞாயிற்றுக்கிழமை காலை **10.00** மணி தொடக்கம் மாலை **5.00** மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு. மறுநாள் **06.05.2024** திங்கட்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று காலை **10.00** மணிக்கு **General Cemetery, Mount Lavinia** இல் தகனம் செய்யப்படும்.

இங்கனம் பிரிவால் வா... ...னைவி மற்றும் பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 04 . 1962

மறைவு 03 05 2024



### ஆறுமுகம் கிருஸ்ணமோகன் (மோகன்)

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கிருஸ்ணமோகன்(மோகன்) அவர்கள் 03.05.2024 அன்று காலமானார்.

அன்னார் ஆறுமுகம் (காலஞ்சென்ற), மகேஸ்வரி ஆகியோரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம் லட்சுமி தம்பதியின் அன்பு மருமகனும், நாகலட்சுமி கிருஷ்ணமோகன் (ஞானி) அவர்களின் அன்புக் கணவரும், துவாரகா (பொறியியலாளர்), லிவிதரன் (தொழில்நுட்பவியலாளர்), கோபிதரன் (தொழில் நுட்பவியலாளர்), கௌசிகா (MLS) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கரிகாலனின் (பொறியியலாளர்) மாமானாரும், சந்திரவதனா (வவுனியா), சந்திரமோகன்(லண்டன்), சந்திரகலா (நல்லூர்), சந்திரலேகா (இத்தாலி), மதிமோகன் (பிரான்ஷ்), கோமளா (பிரான்ஷ்), சந்திரமலர் (இந்தியா), சசிமோகன் (டென்மார்க்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற அருணகரிநாதன் (வவுனியா), சுகந்தினி(லண்டன்), இராஜேந்திரன் (நல்லூர்), சுதர்சன் (இத்தாலி), ஜெயசாந்தி (பிரான்ஸ்), சுரேந்திரன் (பிரான்ஸ்), சசிகுமார் (இந்தியா), உசாநிதி (டென்மார்க்) ஆகியோர் மற்றும் சாந்தலட்சுமி, யோகலிங்கம், யோகலட்சுமி, தவலிங்கம், கணேசலிங்கம், ஞானலிங்கம், ஜெயலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சரவணமுத்து நாகம்மா (புங்குடுதீவு), காலஞ்சென்ற செல்வராசா அன்னம்மா (சாமியம்மா - ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் (விசுவப்பா) மற்றும் கமலாம்பா தம்பதி, லோகேஸ்வரன் (காலஞ்சென்ற) கமலாம்பாள்(கொழும்பு) தம்பதி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2024) மதியம் 12 மணியளவில் வேலணை 8ம் வட்டாரத்தில் நடைபெற்று, பூதவுடல் அம்பலவி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு, வேலணை - 08.

தகவல்: குடும்பத்தினர்.
077 9471 282

(CS 410) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரத்தில் பெண்ணின் சடலம்

## கொலையா? தற்கொலையா? எனத் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், மே 5

தெல்லிப்பழை துர்க்காபுரத்திலிருந்து பெண்ணின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. அவர் தற்கொலை செய்து கொண்டாரா? இல்லை கொலை செய்யப்பட்டாரா? என்பது தொடர்பில் சட்டமருத்துவ அதிகாரியின் அறிக்கையின் பின்னரே தெரிவிக்கமுடியும் என தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த கனடி ஜஸ்மின் (வயது - 37) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் தெல்லிப்பழை மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தாயாரின் சடலம் மீட்கப்பட்ட பின்னர் அவரது 16 வயது மகனைக் காணவில்லை எனத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதேவேளை - இறப்பு விசாரகைளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஒ-125-26)

# கிரகமொன்றில் தண்ணீர் உறுதிப்படுத்தியது நாஸா

பூமியில் இருந்து 86 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள புதிய கிரகத்தில் தண்ணீர் இருப்பது நாஸாவில் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பூமியில் இருந்து சுமார் 86 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள புதிய கிரகத்திலேயே இவ்வாறு தண்ணீர் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கிரகம் சூரியக் குடும்பத்தில் உள்ள வியாழன் கிரகத்தின் அதேநிறை கொண்டது. இந்தக் கிரகம் சூரியனைப் போன்ற ஒரு நட்சத்திரத்தைச் சுற்றிவருகிறது.

கிரகம் அதன் நட்சத்திரத்துக்கு அருகில் செல்லும்போது, அதன் சுழற்சி அதன் சுற்றுப்பாதையுடன் ஒத்துப்போகிறது. அதாவது சந்திரன் எமது பூமியை சுற்றிவருவது போல் கிரகம் அதன் நட்சத்திரத்தைச்சுற்றிவருகிறது. இதன்காரணமாக, கிரகத்தின் ஒரு பாதி நிரந்தரமாக வெளிச்சமாகவும், மற்ற பாதி நிரந்தரமாக இருட்டாகவும் மிகவும் குளிராகவும் இருப்பதுடன், இருண்ட பாகத்திலேயே தண்ணீர் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# புதறிகுடா நீர்த்தேக்கத்தில் நேற்றுச் சடலம் கண்டுபிடிப்பு

முல்லைத்தீவு, மே 5

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதறிகுடா நீர்த்தேக்கத்திலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் தண்ணீரூற்று கிழக்கைச் சேர்ந்த செல்வராசா மணிமாறன் (வயது - 53) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். புதறிகுடாவில் சட்டவிரோத மதுபான விற்பனை இடம்பெறுவதாகவும், நுகர்பவர்கள் இவ்வாறு கடந்த காலங்களில் புதறிகுடா நீர்த்தேக்கத்தில் விழுந்து உயிரிழந்த சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-19)


## காணி தேவை

பரப்பு 10 லட்சத்திற்கு மேற்படாத காணி தேவை. காணிக்கு அருகில் அதி உயர் மின்சாரம் இருக்கவேண்டும்.

077 082 1010

## வேலையாள்கள் தேவை

யாழ்மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் பிரதான வீதியில் இயங்கிவரும் பிரபல வெதுப்பகமொன்றிற்கு உற்பத்திப்பகுதியில் ஆண்களுக்கு வேலைவாய்ப்பு உண்டு. முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 350 0605, 076 534 3034

## மணமகள் தேவை

V.1978 கேட்டை நட்சத்திரம் 11 சூரியன், செவ்வாய் உள்ள சுயதொழில் செய்யும் செல்வந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 075 617 8008

## வேலையாள்கள் தேவை

பளையில் இயங்கும் தும்புத் தொழிற்சாலைக்கு தங்கியிருந்து வேலைசெய்வதற்கு வேலையாள்கள் தேவை.

077 365 6826


## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 01 . 1951



மறைவு 02 . 05 . 2024

### கனகேந்திரன் குணமணி

ஈவினை புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகேந்திரன் குணமணி (02.05.2024) வியாழக்கிழமை அன்று ஈவினையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - ஞானம்மா தம்பதியரின் மகளும், கனகேந்திரனின் பாசமிகு மனைவியும், கிரிஷாந்தன் (கனடா), துஷ்யந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிருத்தன் (கனடா), நிதாவின (கனடா) அன்பு மாமியாரும், கிருத்திக் (கனடா), கிஷாரா (கனடா), திசான் (கனடா), கௌசிக் (கனடா), கௌதம் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மாகாதேவன், குணலிங்கம் மற்றும் புஸ்பராணி, கலாநிதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
071 173 3991

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன். (CS/54933) J-1


## வேலையாட்கள் தேவை

வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை

தொடர்பு: 074 143 3701

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள அரச திணைக்களத்தில் தொழில்புரியும் (HND IT) மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 864 9878, 077 634 3103

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி ஒழுங்கை 2 பரப்பு, 2 குளி, 3 அறைகள், சமையல் அறை, இணைந்த குளியலறை என்பவற்றைக் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. (CS/54925) J-1

076 856 1344, 077 010 7895

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில் ஆர்வமுள்ள சகல வயதினருக்கும் ஆண்டு 7 to GCE OL, AL, பட்டதாரிகள் - தொழில்புரிவோர். (CR/42358) J-1

K.Ganesh B.A 077 766 8725

## வேலையாள்கள் தேவை

இருபாலையில் இயங்கும் புத்தக, போட்டோ கொப்பி கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

077 248 7801

## பெண் வேலையாள்கள் தேவை

கோண்டாவிலில் இயங்கும் Good Morning பல்பொருள் வாணிபத்திற்கு முகாமையாளர், காசாளர், விற்பனையாளர், உதவியாளர் தேவை. சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகம்தரவும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

077 790 6224

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை நவாலி றோட்டில் 15 பரப்பு வயற்காணி விற்பனைக்கு உண்டு. (CS/400) J-1

தொடர்பு:- 077 199 6117

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (V) 1989 ஆம் ஆண்டு (மிருகசீரிடம் (1) நட்சத்திரத்தில் பிறந்தவரும் (கிரகபாவம் 64) தனியார் நிறுவனத்தில் நிரந்தர விற்பனைப் பிரதிநிதியாக வேலை செய்துவரும் மணமகனுக்கு அரச அல்லது தனியார் துறையில் வேலை செய்யும் அல்லது A/L படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

குணபதி திருமண சேவை

077 307 6902, 070 607 6902

## வேலை ஆட்கள் தேவை

K.K.S Road கோண்டாவிலில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு அனைத்து வேலை ஆட்களும் தேவை. ஆண், பெண் இருபாலாரும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு: 077 804 2561

## வீடும் காணியும் விற்பனைக்கு

இல.71, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டில் அமைந்துள்ள ஒரு பரப்பும் 09 குளியும் கொண்ட வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

076 267 1530
076 577 3567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி விற்பனைக்கு

New யூஸ் Maker, சாய்பாட்டு மேசை, அலுவலக மேசை, குளிர்சாதனப்பெட்டி, அயன் Table என்பன விற்பனைக்கு உண்டு.

T.P :- 075 653 7952

## வாடகைத்தாய் தேவை

நல்ல ஆரோக்கியமான உடல்நிலை உடைய வாடகைத்தாய் தேவை.

(தனிப்பட்ட இரகசியம் காக்கப்படும்).

(CS/54833) J-1

தொடர்பு:- 074 046 5157

## வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை "ஸ்கந்தா" பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(CS 54908) S-1

077 391 3859,077 729 9212

## விற்பனையாளர் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் இலத்திரனியல் நிறுவனம் ஒன்றிற்கு ஆண் விற்பனையாளர் தேவை. வயதெல்லை : 22 -35

076 324 1761

## முகாமையாளர் தேவை

யாழ் நகரிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு இரவு நேர முகாமையாளர் தேவை.

(CS/54889) J-1

தொடர்பு:- 077 722 2715

## இடம் தேவை

யாழ் நகரத்திற்கு அண்மையில் (திருநெல்வேலி, கொக்குவில், சுன்னாகம்) காரியாலயம் அமைப்பதற்கு குறைந்தது 1000 சதுரஅடி கொண்ட கட்டடம் தேவை.

075 971 7118

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள உணவகத்திற்கு சமையலாளர், பரோட்டா செய்பவர், சமையல் உதவியாளர், துப்புரவு பணியாளர் தேவை.

(cs 398) (N-1)

077 062 6507

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் உரும்பிராய் வீதி - 1 3/4 பரப்பு, 2 பரப்பு.
திருநெல்வேலி - நாவலடி வீதி பரப்பு 1 குளி 5.22

077 104 8865

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

மின்சார உபகரணங்களை விற்கும் கடை ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் இருவர் வேலைக்குத் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சுமார் 60 000 ரூபா + EPF ETF சம்பளமாக வழங்கப்படும்.

(cs 54907) (N-1)

076 200 1700

## காணி விற்பனைக்கு உண்டு

நல்லூர் பின்வீதி துர்க்கா மணி மண்டபத்தின் அருகில் செல்லும் பாதையூடாக அமைந்துள்ள **4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.** மேலும் மூத்ததம்பிமடம் அருகிலுள்ள பாதையினூடாகவும் செல்லமுடியும்.

(CS/54890) J-1

077 229 4985, 077 621 2039

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி **(Show Money)** வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை **15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம்** வரை
- தரகர் தேவையில்லை.

(CS/375) J-1

தொடர்பு :- 077 886 2927

## வேலையாள்கள் தேவை

பிரதான வீதி, அளவெட்டியில் இயங்கும் மொத்த சில்லறை வியாபார நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் உடனடியாகத் தேவை.

1) **விற்பனையாளர்**
2) **பொதி ஏற்றி இறக்கக் கூடிய தொழிலாளி**

வேலைக்கு ஏற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0762 959 564, 077 911 9971

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

**Finex** ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க **இரசாயன பொருள்களை விலைக் கழிவுடன்** பெற்றுக்கொள்ளலாம்.

**போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

FINEX

## பாரிய தொழில் ஆரம்பிக்க காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு

யாழ். கல்வியங்காடு சந்தைக்கு மிக அருகே **பாரிய புதிய தொழில் ஸ்தாபனம்** ஆரம்பிப்பதற்கு மிக உகந்த **1 1/4 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.**

(CS/54920) J-1

தொடர்பு :- 077 436 2578

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் அருட்சகோதரி
**மேரி றொசாந்தி**
அவர்களின் பாசமிகு தாயார் திருமதி
**டொமினிக் மேரிராணி**
காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலைச் சமூகம்**
**யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.**

(CS/54939) J-1

# WE ARE HIRING!



## Academic Director

Academician with diversified experience and effective administrative skill for maintaining academic excellence and growth of our institution.

- Qualification - Master's Degree or higher qualification
- Age - Should be below 70
- Experience - Minimum 3 years in Healthcare field also administrative field

**Submit your resume to theimsjaffna@gmail.com**
**WhatsApp at 0760163515**

Institute of Medical Sciences,
Green Memorial Hospital, Manipay

## Now We Are Hiring

**Manager**

**White House Funeral Directors, Jaffna** is looking for a **full-time manager**

- **Job Responsibilities**

1. Managing daily and monthly accounts
2. Managing cash flow in and out
3. Involvement in day-to-day office operations and management
4. Handling customers

- **Required Qualifications**

1. Aged between 35 and 60
2. Basic knowledge of accounting
3. Proficiency in Tamil and English (Proficiency in Sinhala will be an added advantage)
4. 1 year of experience in managing a shop

**Salary: Attractive Package**

Interested candidates are encouraged to contact via **0775004511** before **May 31st, 2024**

**White House Funeral Directors**
**Jaffna**

(cs 54897)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் மணியாக 04.08.1940 — விண்ணில் தெய்வத்தின் 07.04.2024

# அமரர் இராசமணி கனகசபை

தையிட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குலவிளக்கு அன்புத் தாயாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் 07.05.2024 அன்று 161, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

அன்னார் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் துயரத்தில் பங்குகொண்டும் ஆறுதல் கூறியும், தொலைபேசி மற்றும் சமூகவலைத்தளங்களின் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் உளம்நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

(cs.54918) (N01)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்புக்களியில்
இருபோக மழையில்
துருவேறிக் கிடக்கிறது
கனவு.

காடுகளின் சூரியன்
நந்திக் கடலில்
உருகி வீழ்கிறான்.

கானாங்கோழி
காணாமற்போனவரின்
கடைசிச் சொற்களை
அடைகாத்திருக்கிறது.

- நிலாந்தன்

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 சித்திரை 22 ஞாயிற்றுக்கிழமை (05.05.2024) சிகரம் : 200

# தமிழ்ப் பொதுவேட்பாளர் :

## சிவில் சமூகங்கள் எடுத்த முடிவு




○ நிலாந்தன்

கடந்த மாதம் 30 ஆம் திகதி வவுனியாவில் வாடி வீட்டு விடுதியில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த சிவில் சமூகங்களும் மக்கள் அமைப்புகளும் கூடிக் கதைத்தன. ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்துவது என்று மேற்படி சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டது. ஒரு கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

அது ஒரு முக்கியமான சிவில் சமூகச்சந்திப்பு. காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை நிகழ்ந்த அந்தச்சந்திப்பில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த 32 சிவில் சமூகங்கள் மற்றும் மக்கள் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அமைப்புகளைச் சாராத செயற்பாட்டாளர்களுமாக மொத்தம் 46 பேர் பங்கு பற்றினார்கள்.

மதத் தலைவர்கள், கருத்துருவாக்கிகள், ஏற்கனவே பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற விடயத்தை முன்னிலைப்படுத்தி கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்திய "மக்கள் மனு" என்ற சிவில் அமைப்பு, வெளிநாட்டுத் தூதரகங்களோடான சந்திப்புகளில் தொடர்ச்சியாக தமிழ் நோக்கு நிலையை வெளிப்படுத்தும் "தமிழ் சிவில் சமூக அமையம்" உள்ளிட்ட பலமான சிவில் அமைப்புகள். வலிந்து காணாமல் போகச்செய்யப்பட்டவர்களுக்கான அமைப்பு, அரசியல் கைதிகளுக்கான அமைப்பாகிய "குரலற்றவர்களின் குரல்" அமைப்பு, வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவ அமைப்புகள், மயிலத்தமடுவில் மேய்ச்சல் தரையை மீட்பதற்காகப் போராடும் அமைப்பு, தமிழ்ப் பகுதிகளில் தொடர்ச்சியாக இயங்கும் செயற்பாட்டு அமைப்புகள்... முதலாக பல்வேறு வகைப்பட்ட அமைப்புகள் அந்தச்சந்திப்பில் பங்குபற்றின.

மிகக்குறிப்பாக "பொங்கு தமிழ்" எழுச்சியின் முக்கியஸ்தர்கள், "எழுக தமிழ்" எழுச்சிக்குப் பின்னால் இருந்து உழைத்தவர்கள், "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான" அமைப்பின் இணைத் தலைவர்கள் என்று, தமிழ்ப் பரப்பில் நிகழ்ந்த மூன்று எழுச்சிகளின் பின்னால் நின்று உழைத்த பிரதிநிதிகளும் அங்கே வந்திருந்தார்கள் என்பது ஒரு சிறப்பம்சம். இம்மூன்று மக்கள் எழுச்சி அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் அவ்வாறு ஒரு சந்திப்பில் ஒன்றுகூடியமை என்பது கடந்த 15 ஆண்டுகளில் இதுதான் முதல் தடவை. சந்திப்பின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கை வருமாறு....

"தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதும் சிந்திப்பதும் செயற்படுவதும் காலத்தின் தேவை என்ற அடிப்படையில், 30.04.2024 அன்று வவுனியா வாடிவீடு விடுதியில் ஒன்றுகூடிய தமிழர் தாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகத்தினர் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர்.

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் பிரயோகிப்பதற்கான ஒரு களமாக ஜனாதிபதித் தேர்தலைக் கையாள்வது.
2. ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து, அந்தத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக்கான பொது வாக்கெடுப்பாக கையாள்வது.
3. அதற்கு அமைய ஒரு தமிழ்ப்பொதுவேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது.
4. அதற்காக சிவில் சமூகமும் தமிழ்த் தேசியக்கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது.
5. தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்காலக் கட்டமைப்புகளை நோக்காகக் கொண்டு செயற்படுவது.....

இவ்வாறு சிவில் சமூகங்களும் மக்கள் அமைப்புகளும் தங்களுக்கு இடையே ஒரு பொது நிலைப்பாட்டை எடுத்த பின், அடுத்த கட்டமாக அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் பொருட்டு கட்சிகளோடு உரையாடுவதற்கு என்று ஒரு குழு உருவாக்கப்பட்டது.

பொதுக்கட்டமைப்பானது சிவில் சமூகங்களையும் அரசியல் கட்சிகளையும் கொண்டதாக அமையும். பொதுக்கட்டமைப்பு ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்கு தேவையான குழுக்களை உருவாக்கும். ஒரு பொதுத்தமிழ் வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கான ஓர் உப குழு, தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதற்கான உப குழு, நிதி விவகாரங்களைக் கையாள்வதற்கான உபகுழு, பொதுத் தமிழ்வேட்பாளர் என்ற தெரிவை ஏற்றுக்கொள்ளாத ஏனைய தரப்புகளோடு உரையாடுவதற்கும் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளோடு உரையாடுவதற்கும் ஓர் உபகுழு... என்று வெவ்வேறு உபகுழுக்கள் உருவாக்கப்படும். அதாவது ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை முன்னிறுத்துவது தொடர்பாக கட்டமைப்பு ரீதியாகச் சிந்திக்கப்படுகின்றது என்று பொருள்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் எனப்படுகின்றவர் தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீடு. தமிழ்ப் பொதுநிலைப்பாடு எனப்படுவது பிரயோக நிலையில் தமிழ் ஐக்கியம்தான். தமிழ் ஐக்கியம் என்பது இங்கு தமிழ்க்கட்சிகளின் ஐக்கியம் என்பதைக் கடந்து, கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் மக்கள் அமைப்புகளும் இணைந்த ஒரு கட்டமைப்பாகச் சிந்திக்கப்படுகின்றது.

கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் நிகழ்ந்த எல்லா எழுச்சிகளும் சிவில் சமூகமும் அரசியல் சமூகமும் இணைந்த ஒரு கட்டமைப்புக் கூடாகவே சிந்திக்கப்பட்டன. எழுக தமிழாகட்டும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரெழுச்சியாகட்டும் ஏனைய எந்த ஒரு பெரிய மக்கள் எழுச்சியாக இருந்தாலும், அங்கே தனியாகக் கட்சிகள் அதனை முன்னெடுக்கவில்லை. தனிய சிவில் சமூகங்களும் அதனை முன்னெடுக்கவில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் வெற்றி பெற்ற எல்லாப் பேரெழுச்சிகளும் சிவில் சமூகங்களும் அரசியல் சமூகமும் இணைந்து பெற்ற வெற்றிகள்தான். அப்படித்தான் கடந்த 15 ஆண்டுகளுக்குள் ஐ.நா.வுக்கு அனுப்பப்பட்ட கூட்டுக் கடிதம், பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்ட 13 அம்ச ஆவணம், தமிழகத்தில் சிறப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்களை விடுவிக்கக் கோரி தமிழக முதல்வருக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கூட்டுக் கடிதம்.. உள்ளிட்ட பெரும்பாலான முயற்சிகள் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து முன்னெடுத்தவைதான். இதை இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால், கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்தபோதுதான் வெற்றிகள்கிடைத்தன. அந்த அடிப்படையில்தான் இப்பொழுதும் அவ்வாறான ஒரு வெற்றியை நோக்கிச் சிந்திக்கப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பு வெற்றிபெறுமாக இருந்தால் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு கட்டமைப்பு என்பதைக் கடந்து தமிழ்ப்பொது விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒரு பொருத்தமான அரசியல் தளமாக மாற்றப்பட வேண்டும் என்ற விருப்பமும் மேற்படி கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. அதன்படி எதிர்காலத்தில் தமிழ் அரசியலை தீர்மானிப்பதற்குத் தேவையான ஒரு பலமான மக்கள் அமைப்புக்குரிய பொருத்தமான கட்டமைப்பாக அது வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ்மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் பேரவை தோன்றியது. தமிழ் மரபுரிமைப் பேரவை தோன்றியது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரெழுச்சி இயக்கம் தோன்றியது. ஆனால் இவை எவையுமே அவற்றின் அடுத்தடுத்த கட்டக் கூர்ப்புக்குப் போகவில்லை. இவை எவையுமே தேர்தல்மைய அரசியலைக் கடந்த ஒரு வெகுசன அரசியலை முன்னெடுக்கும் பொருத்தமான ஏற்பாடுகளாகக் கூர்ப்படையவில்லை. இந்த மூன்று கட்டமைப்புகளின் எழுச்சியில் இருந்தும் வீழ்ச்சியிலிருந்தும் அல்லது போதாமைகளில் இருந்தும் கற்றுக்கொண்டு ஒரு புதிய பொருத்தமான கட்டமைப்பை உருவாக்குவதற்கான முதல் அடிவைப்பாக மேற்படி கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பை எடுத்துக் கொள்ளலாமா?

கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சி அரசியல் எனப்படுவது வளர்ச்சியாக இல்லை. தேய்மானமாகத்தான் இருக்கின்றது. பெரிய கூட்டுகள் உடைந்து சிறு கூட்டுகள் உருவாகி வருகின்றன. கூட்டுகள் உடைந்துடைந்து உருவாகும் தனிக் கட்சிகளும் கூட பின்நாளில் தங்களுக்குள் உடைகின்றன. அதாவது கடந்த 15 ஆண்டு கால கட்சி அரசியல் எனப்படுவது, தேயும் அல்லது சித

03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வவுனியா பொதுமருத்துவமனை'

பா.குமுதன்




# நம்பிக்கை இழக்கும் மக்கள்!

நிறைவுகாண் மருத்துவசேவை என்பது இன்றியமையாத ஒன்று. உலகளவில் இலவச சுகாதாரத்துறையினை வழங்கி வரும் நாடுகளில் இலங்கையும் முன்னணி வகின்றது. வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில் ஒரு நோயாளி தான் விரும்பியவுடன் மருத்துவரைச் சந்திப்பதற்கான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. ஆனால் இலங்கை மக்கள் அந்தவிடயத்தில் பாக்கியசாலிகள். அதற்கு 1951ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்ட இலவச சுகாதாரக் கொள்கையே அடித்தளம் . இலங்கையானது ஒவ்வொருவருடமும் சுகாதாரத்துறைக்காக அதிகநிதியினை ஒதுக்கி வருகின்றது. நடப்பாண்டிலும் 41ஆயிரம் கோடி ரூபா அதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இலவச சுகாதார சேவைகள் என்று குறிப்பிடும் போது அங்கு மருத்துவம் முதல்நிலை வகிக்கின்றது. இலங்கையில் அரச மருத்துவமனைகள் ஊடாக இலவச மருத்துவசேவைகள் வழங்கப்பட்டுவருகின்றன. அந்தச் சேவைகள் நிறைவுகாணும் வகையில் மக்களைச் சென்றடையவேண்டும். ஆனால் இலவசமருத்துவத்தின் பயனை இலங்கைமக்கள் முழுமையாக அனுபவிக்கவில்லை.

வவுனியா பொதுமருத்துவமனை வன்னிமக்களின் மருத்துவப்பங்காளிகளில் முதன்மையானது. குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் இரண்டு இலட்சம் மக்கள் உட்பட அதனை அண்டிய பிரதேசங்களான பதவியா, மதவாச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகியவற்றைச் சேர்ந்தோரும் இங்கு மருத்துவசேவைகளை பெற்றுவருகின்றனர். தினமும் வவுனியா மருத்துவமனையில் 200 வரையான உள்நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். 800 வரையான வெளிநோயாளர்கள் மருத்துவ சேவைகளைப் பெற்றுச்செல்கின்றனர். ஆனால் அந்த மருத்துவமனையின் சேவைகள் பொதுமக்களுக்கு போதியளவாக இல்லை. இது அங்கு சிகிச்சைபெற்றுக்கொள்ளச்செல்லும் மக்களின் பெரும் குறையாகவுள்ளது. அதேபோல மருத்துவமனையின் பௌதீக மனித வளங்களும் முழுமையான சேவைகளை வழங்குவதில் நெருக்கடி நிலையினை ஏற்படுத்துகின்றன.

### மருத்துவர்கள் பற்றாக்குறை

வவுனியா மாவட்டத்தின் சனத்தொகை விகிதத்திற்கு ஏற்ப அங்கு பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கையும் தேவைக்கேற்ப போதியளவில் இல்லை.

| மருத்துவப் பிரிவினர் | தொகை |
|---|---|
| மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை | 112 |
| பொதுமருத்துவ நிபுணர்கள் | 03 |
| சத்திரசிகிச்சை நிபுணர்கள் | 02 |
| சிறுநீரக மருத்துவ நிபுணர் | 01 |
| நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் | 01 |
| இருதய சத்திரசிகிச்சை நிபுணர்கள் | 01 |
| பெண் நோயியல் நிபுணர்கள் | 00 |
| காது மூக்கு தொண்டை நிபுணர் | 01 |
| சிறுநீரக அறுவைச்சிகிச்சை நிபுணர் | 01 |
| எலும்பியல் சத்திரசிகச்சை நிபுணர் | 02 |
| முகச்சீரமைப்பு சத்திரசிகிச்சை நிபுணர் | 01 |
| நிரந்தர சட்ட மருத்துவ அதிகாரி | 01 |

அட்டவணை - 1

அட்டவணை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி பொதுமருத்துவமனையில் பணிபுரியும் சில மருத்துவர்களின் எண்ணிக்கையினை அறிந்துகொள்ளமுடியும். அதன்படி பெண்நோயியல் மருத்துவ நிபுணர்கள் ஒருவர்கூட அங்கு பணியில் இல்லை. மக்களுக்கான சேவையினை வழங்குவதற்கு பொதுமருத்துவர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக மருத்துவமனையின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அட்டவணை ஒன்றின்படி துறைசார்ந்த மருத்துவ நிபுணர்கள் குறைந்தது இருவரைக்கூட கொண்டிராத பலதுறைகள் காணப்படுகின்றன. இது இலகுவான மருத்துவசேவைகளை வழங்குவதில் தடையினை ஏற்படுத்துகின்றது. அத்துடன் அந்த மருத்துவருக்கும் பணிச்சுமையினை ஏற்படுத்துகின்றது. குறித்த மருத்துவ நிபுணர் விடுமுறையில் சென்றால் அவர் மீளத்திரும்பும் வரை நோயாளர்கள் காக்கவைக்கப்படுகின்றனர். வவுனியா மாவட்டத்தின் சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் குறைந்தது ஒவ்வொரு துறைகளையும் சேர்ந்த 3 க்கும் குறையாத மருத்துவநிபுணர்களின் தேவை உணரப்படுகின்றது. ஆனால் இங்கு அதற்கு மாறான நிலையினையே காண்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| தாதியர்கள் | 221 | வெற்றிடம் | 29 |
| சிற்றூழியர்கள் | 288 | வெற்றிடம் | 69 |

அட்டவணை - 2

அட்டவணை இரண்டினை அவதானிப்பதன் மூலம் தாதியர்கள், சிற்றூழியர்களின் தேவையும் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத நிலைமையினைக் காணமுடியும். இவையும் பொதுமக்களுக்கான சிறந்த சேவையினை வழங்குவதில் தடங்கல்களை ஏற்படுத்துகின்றன.

## தரையில் உறங்கும் நோயாளர்கள்



வவுனியா மருத்துவமனையின் விடுதிகளில் கட்டில்கள் போதாமையினால் நோயாளிகள் தரையிலும் நடைபாதையிலும் உறங்கும் அவலநிலைமைநீண்டகாலமாகத் தொடர்கின்றது. மருத்துவமனையில் மொத்தமாக 23 மருத்துவ விடுதிகள் காணப்படுகின்றன. அவை தினசரி அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு போதுமானதாக இல்லை. இதனால் மேற்கூறியநிலை ஏற்படுகின்றது. சில சமயங்களில் ஒரு கட்டிலில் இரு நோயாளர்களும் படுத்துறங்கும் நிலையும் உண்டாகின்றது.

| | |
|---|---|
| மொத்த விடுதிகள் | 23 |
| கட்டில்களின் எண்ணிக்கை | 523 |
| அவசர சிகிச்சை பிரிவு கட்டில்கள் | 08 |
| அதிதீவிர பிரிவு கட்டில்கள் | 05 |
| விபத்து பிரிவு கட்டில்கள் | 26 |

அட்டவணை - 3

அட்டவணை மூன்றின் படி அனைத்து விடுதிகளிலும் உள்ள கட்டில்களின் எண்ணிக்கை 523 எனக் குறிப்பிடப்படுகின்றது. இதேவேளை மருத்துவமனையில் தினமும் அனுமதிக்கப்படும் உள்நோயாளர்களின் எண்ணிக்கை சராசரியாக 200 என மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கின்றது. இது பெரிய இடைவெளியினைக் காட்டுவதை அவதானிக்கமுடியும். நோய்நிலைமை காரணமாக அனுமதிக்கப்படும் ஒரு நோயாளர் குறைந்தபட்சம் இரண்டு நாள்களேனும் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறவேண்டி ஏற்படும். சில நோயாளர்கள் மாதக்கணக்கிலும் தங்கியிருந்து சிகிச்சைபெறவேண்டிவரும். இதனால் விடுதிகள் நிரம்பி வழிகின்றன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு கட்டில்கள் போதுமானதாக இல்லை என்பதை மருத்துவமனை நிர்வாகம் ஏற்றுக்கொள்கின்றது. இதனைத் தவிர்ப்பதற்காக நோயாளர்கள் தரையில் உறங்கவைக்கப்படுகின்றார்கள். அல்லது இரு நோயாளர்களுக்கு ஒரு கட்டில் என்று ஒதுக்கப்படுகின்றது. இதனைச் சமாளிப்பதற்காக சிகிச்சை முழுமையடையும் முன்னரே தீவிரமற்ற நோயாளர்கள் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும் சூழலும் ஏற்படுகின்றது.

இதேவேளை- விபத்துப்பிரிவில் 26 கட்டில்கள் உள்ளன. இது அனுமதிக்கப்படும் நோயாளர்கள் போதுமானதாக இல்லை என மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கின்றது. அத்துடன் மேலும் 20 கட்டில்கள்அங்கு தேவைப்படுகின்றன. அதனை சமநிலைப்படுத்துவதற்காக விபத்துப்பிரிவில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள் சாதாரண மருத்துவவிடுதிகளுக்கு விரைவாக மாற்றப்படுகின்றார்கள்.

அத்துடன் விபத்துப்பிரிவானது ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவான ஒரு விடுதியாக அமைக்கப்பட்டுள்ளது. இது பெண்நோயாளர்களுக்கு பல அசௌகரியங்களை உண்டாக்குகின்றது. அதிதீவிரசிகிச்சைப் பிரிவின் நிலையும் இதுவே அங்கு வெறும் 5 கட்டில்களே இருக்கின்றன. சமநேரத்தில் நோயாளர்கள் அதிகரித்தால் அவர்கள் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்படுகின்றனர். எனவே விடுதிகளை அதிகரித்து கட்டில்களை கூட்ட வேண்டிய பணியினை மருத்துவமனை நிர்வாகம் திறம்படச்செய்யவில்லை.

பலமாதங்களாக பழுதடைந்துள்ள CT ஸ்கான் இயந்திரம் வவுனியா பொதுமருத்துவமனையில் ஒரேயொரு CT ஸ்கான் இயந்திரம் மாத்திரமே உள்ளது. அது கடந்த சிலமாதங்களாக பழுதடைந்துபோயுள்ளது. இந்தக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் வரை அது திருத்தப்படவில்லை. இதனால் பலநோயாளர்கள் அலைக்கழிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். குறிப்பாக ஸ்கான் எடுக்கவேண்டிய நோயாளர்கள் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை, யாழ்.போதனா மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர் குறிப்பாக பக்கவாதம் உட்படபல நோய்களைக் கண்டறிவதற்கு CT ஸ்கான் பரிசோதனை அவசியமானது. எனவே குறித்த இயந்திரம் பழுதடைந்துள்ளமையால் அந்த நோய் நிலைமை தீவிரமடையும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இதேவேளை வெளிமாவட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்புவதன் மூலம் நேரவிரயம் மாத்திரம் அல்லாமல் வீண் செலவும் ஏற்படுகின்றது.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிணவறைக் கட்டடம்

வெளிமாவட்ட மருத்துவமனைகளுக்கு ஸ்கான் செய்வதற்காக. கொண்டுசெல்லப்படும் ஒரு நோயாளிக்காக அம்புலன்ஸில் ஒரு மருத்துவர் தாதியர், சிற்றூழியர் ஆகியோர் பயணிக்கவேண்டும். இது வீணானசெலவுக்கு வழிவகுப்பதுடன் நோயாளர்களையும் சிரமத்துக்கு உள்ளாக்குகின்றது . மருத்துவமனையில் அம்புலன்ஸுக்கும் தட்டுப்பாடுநிலவுகின்றது. அதற்காகவும் காத்திருக்கவேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு மாதங்களாக இந்த நிலைமையே நீடிக்கின்றது.

ஸ்கான் இயந்திரம் பழுதடைந்து மாதக்கணக்காகும் நிலையில் திருத்துவதற்கான நடவடிக்கையில் மருத்துவமனை நிர்வாகம் விரைந்துசெயற்படவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுகின்றது. அரசநிதி கிடைக்காதவிடத்து தனவந்தர்கள், கொடையாளர்களின் உதவிகளைப்பெற்றேனும் அதனைச் சீர்செய்திருக்கமுடியும். ஆனால் அதற்கான முயற்சிகளை மருத்துவமனை நிர்வாகம் இதுவரை செய்யவில்லை. இதனால் நோயாளர்களே பாதிப்படைந்துள்ளனர்.

உதாரணமாக வவுனியாவின் எல்லைக்கிராமமான மருதோடையில் இருந்து அவசரசிகிச்சைபெறவேண்டிய ஒரு நோயாளர், வவுனியாமருத்துவமனைக்கு கொண்டுவரப்படுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். அவர் 50 கிலோமீற்றர்கள் தூரம்பயணம் செய்து பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றார். அவருக்கு ஸ்கான் எடுக்கவேண்டியதேவை ஏற்பட்டால் மீண்டும் 60கிலோமீற்றர் தொலைவில் உள்ள அனுராதபுரம்மருத்துவமனைக்கு பயணிக்கவேண்டும். இதனால் நோய்முற்றி மரணம் ஏற்படும் சந்தர்ப்பமும் உருவாக்கப்படுகின்றது.

இதேவேளை மருத்துவமனையில் MRI ஸ்கானர் இயந்திரமும் இல்லை. அந்தப்பரிசோதனையினைச் செய்வதற்காக பொதுமக்கள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகியபகுதிகளில் உள்ள தனியார்மருத்துவமனைகளுக்கே செல்லவேண்டும். அந்தப் பரிசோதனைக்காக குறைந்தது 30ஆயிரம் ரூபா செலவளிக்கப்படுகின்றது. எனவே சாதாரணமக்களால் இவ்வாறான நவீனமருத்துவ வசதிகளைப் பயன்படுத்த முடியாதநிலை தோன்றியுள்ளது.

| மருத்துவமனையில் பிறந்து மரணித்த சிசு மரணங்கள் | |
|---|---|
| 2022 | 04 |
| 2023 | 06 |

### செயற்திறனற்ற சிறுநீரகப்பிரிவு

நாட்டில் சிறுநீரகநோயாளர்கள் அதிகம் உள்ள மாவட்டங்களில் வவுனியாவும் ஒன்று. ஒவ்வொரு வருடங்களும் மாவட்டத்தில் சிறுநீரகநோய்ப் பாதிப்புக்குள்ளாகும் புதியநோயாளர்கள் அதிகரித்துச் செல்கின்றனர். கடந்த 5 வருடங்களில் நாட்பட்ட புதிய நோயாளர்கள் 1500 பேர் வவுனியாவில் பதிவாகியுள்ளனர். 2023 ஆம் ஆண்டில் வவுனியா மருத்துவமனையில் 816 சிறுநீரக நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களும் அடங்குவர்.

நாட்பட்டசிறுநீரக நோயாளர்களுக்கான குருதிச்சுத்திகரிப்பு பிரிவு வவுனியா மருத்துவமனையில் அமைந்துள்ளது. எனினும் அதன் சேவை நோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது போதுமானதாக இல்லை. அந்தப்பிரிவில் 17 இயந்திரங்கள் மாத்திரமேஉள்ளன. அவற்றின் மூலம் தினமும் 34 நோயாளர்களுக்கு குருதிச்சுத்திகரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. போதிய இயந்திரங்கள் இன்மையால் அந்தப்பிரிவின் சேவையினை முழுமையாக வழங்கமுடியாதுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குருதிச்சுத்திகரிப்பு சிகிச்சை தேவையானநோயாளர்கள் செட்டிகுளம் மற்றும் பதவியா பிரதேச மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இதனால் பொருளாதாரம் நலிவடைந்த நோயாளர்கள் அந்தப்பகுதிகளுக்கு செல்வதில்லை. குறித்த சிகிச்சைக்காக செட்டிகுளம் மருத்துவமனைக்கு சென்றுவருவதற்கு குறைந்தது 6 ஆயிரம் ரூபாவை ஒரு நோயாளி செலவிடவேண்டும். வாரத்தில் இரண்டு நாள்கள் இவ்வாறு செல்லவேண்டும். இதனால் பலர் அதனைப் புறம்தள்ளுகின்றனர். இறுதியில் மரணத்துக்கே அது வழிவகுக்கின்றது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் அதிகநோயாளர்கள் பதிவாகிவருகின்ற போதிலும் பொதுமருத்துவமனையில் ஒரேயொரு சிறுநீரகமருத்துவ நிபுணரே கடமையில்உள்ளார். இதனால் நோயாளர்கள் மாத்திரமன்றி மருத்துவமனையும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றது. எனவே சிறுநீரகப்பிரிவில் இயந்திரங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதுடன் புதியமருத்துவநிபுணர்களையும் நியமிக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

## வசதியற்ற பிணவறை

வவுனியா மருத்துவமனையின் ஏனைய பிரிவுகளைப் போலவே பிணவறையின் வசதிகளும் கீழ்மட்டத்திலேயே இருக்கின்றது. பிணவறை அமைந்துள்ள கட்டடம் மிகவும் பழமையானது. அங்கு ஒரே தடவையில் 12 சடலங்களை மாத்திரமே வைத்திருக்கமுடியும். அது போதிய வசதிகளுடன் இயங்கவில்லை என மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

குறிப்பாக உடற்கூற்றுப்பரிசோதனையினை மேற்கொள்வதற்கான வசதிகள்கூட கீழ்நிலையிலேயே இருக்கின்றன. அத்துடன் 16 சடலங்களை வைத்திருக்கும் வகையில் நவீனவசதியுடன் குளிரூட்டியும் தேவைப்பாடாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவமனைக்கு ஒரேயொரு நிரந்தர சட்டமருத்துவஅதிகாரியே கடமையில் உள்ளார். இதனால் ஒன்றுக்கு மேற்பட்ட சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது பணியில்தாமதம் ஏற்படுவதுடன் சடலங்களை பெறுவதற்காக உறவினர்கள் நீண்டநேரம் காத்திருக்கவேண்டும். மருத்துவர் விடுமுறையில் சென்றாலும் இதேகதைதான்.

### வஞ்சிக்கப்படும் நோயாளர்கள்

மருத்துவமனையில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் நோயாளர்களுக்கும் இடையே ஒரு முரண் உறவு நிலையே தொடர்கிறது. வவுனியா மருத்துவமனையின் பிரதானவாயிலில் கடமைபுரியும் காவலாளிகள் முதல் உயர்மட்டம் வரையிலும் இந்த நிலைமை காணப்படுகின்றது. சுகாதார வசதிகள் குறைவாக உள்ளபோதும், மக்கள்மீது அதிகாரம் செலுத்துவதற்கு மாத்திரம் எவ்வித குறையும் வைப்பதில்லை . ஆளணி வெற்றிடம், பணிச்சுமைபோன்றவற்றாலும் இந்த நிலை ஏற்படலாம். ஆனால் அந்தக் கோபத்தை, பணிச்சுமையின் சீற்றத்தை நோயாளர்களிடத்தில் பிரதிபலிப்பது ஏற்புடையதல்ல. மருத்துவமனை விடுதிகளின் கழிவறைகளைப் பற்றி கூறவே தேவையில்லை. அவை மனிதப் பயன்பாட்டுக்கு உகந்ததாக இருப்பதில்லை. அவை அடிக்கடி சுத்திகரிக்கப் பட்டாலும் சுகாதாரச்சீர்கேடான நிலைமையே நீடிக்கின்றது. அதனைப்பயன்படுத்தும் நோயாளர்களும் சுகாதாரத்தினைப் பேணுவதில்லை.

இந்தநிலை, தனியார் மருத்துவமனைகளை பொதுமக்கள் நாடுவதை ஊக்குவிக்கின்றது. தற்போது பெருமளவான பொதுமக்கள் வவுனியாவில்அமைந்துள்ள தனியார் மருத்துவமனைகளினூடாகச் சேவைகளைப் பெறுவது அதிகரித்துச் செல்கின்றது. சற்று வசதிபடைத்தோர் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு போன்ற பகுதிகளுக்குச் சென்று, தமது மருத்துவத்தேவைகளைப் பூர்த்திசெய்துவருகின்றனர். இது இலவசமருத்துவம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கத்தை சீர்குலைத்து தனியார் மருத்துவத்தை ஊக்குவிக்கும் வாய்ப்பைக் கொடுக்கின்றது.

## நிதிப்பற்றாக்குறை

வவுனியா மருத்துவமனைக்கு ஒவ்வொரு வருடமும் மத்திய அல்லது மாகாணசுகாதார அமைச்சுக்களினூடாக நிதி ஒதுக்கப்படுகின்றது கடந்த 2023 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சால் 58, 980, 000 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த நிதி மருத்துவமனையின் பராமரிப்புக்குப் போதுமானதாக இல்லை என மருத்துவமனைநிர்வாகம் பதில் அளித்துள்ளது. அத்துடன் மேலதிக பராமரிப்புச் செலவு மூலதன நிதியினூடாக செய்யப்பட்டதாகவும் கூறப்படுன்றது. நிதிப்பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை காரணமாக மருத்துவசேவைகளை திறம்படமேற்கொள்ள முடியாதிருப்பதாக நிர்வாகம் தெரிவிக்கின்றது.

எனினும் தொடர்ச்சியாக இந்தக் காரணங்களையே எல்லாவற்றுக்கும் கூறிக்கொண்டிருப்பது நிர்வாகத் திறனற்ற நிலையினையே காட்டுகின்றது. மாவட்டத்தின் உயிர்காப்புச்சேவையின் மூலாதாரமாக இருக்கும் வவுனியா பொது மருத்துவமனை மக்களுக்கான நிறைவான சேவைகளை வழங்குவதில் தோல்வியடைந்திருக்கின்றது. ஒவ்வொருநாளும் நடக்கும் சம்பவங்கள் அதனை மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றது. இந்தநிலைமை மாற்றப்படவேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

## அக்கறையில்லாத அரசியல்வாதிகள்

வவுனியா மருத்துவமனையினை அனைத்துவசதிகளுடன் கூடிய ஒரு நிறுவனமாக மாற்றுவதில் வன்னி மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக்கறையற்றே இருக்கின்றனர். அங்கு என்ன நடக்கின்றது என்ற விடயங்கள் கூட அவர்களுக்குத் தெரியாது .வவுனியாவைப் பொறுத்தவரை ஒரு இராஜாங்கஅமைச்சு மற்றும் மாவட்டஅபிவிருத்திக்குழுத்தலைமை ஆகிய பதவிகள் இருந்தும் இந்த நிலைமை நீடிக்கின்றமை துரதிர்ஷ்டவசமே.

மருத்துவமனைக்கு அருகில்அமைந்துள்ள வெறும் 'பத்திற்கு பத்து'அளவுடைய அறையினைக் கொண்ட ஒரு தனியார் மருத்துவமனையினால் மக்களுக்கு ஏற்ற சேவையினை வழங்கமுடியும் எனில் இவர்களால் ஏன் அதனை வழங்கமுடியாது ?

ஒவ்வொருநாளும் ஏதோ ஒரு நோக்கத்துக்காக வவுனியா மருத்துவமனைக்குச் செல்லும் மக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகளும் ஆதங்கங்களும் எண்ணிலடங்காதவை. பொதுமருத்துவம் மக்களுக்கானது. அதன் பலனைஅவர்கள் அனுபவிக்கவேண்டும். வவுனியா பொது மருத்துவமனை மீது நம்பிக்கை இழந்துகொண்டிருக்கும் மக்களின் மனங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தவேண்டிய தேவை, மருத்துவமனையின் நிர்வாகத்துக்கும், அதனைச் சார்ந்தோருக்கும் உரியது. அதன் மூலமே இலவசமருத்துவத்தைப் பாதுகாக்கமுடியும்.

# தமிழ்ப் பொதுவேட்பாளர் :

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் ஒரு போக்காகத்தான் காணப்படுகின்றது. வளரும் ஒரு போக்காக அல்லது திரளும் ஒரு போக்காக இல்லை. மக்கள் இயக்கங்களும் தோன்றி மறைகின்றன. தொடர்ச்சியாக அடுத்த கட்ட வளர்ச்சிக்குப் போகவில்லை.

எனவே இந்தப் பாரதூரமான வெற்றிடத்தின் பின்னணியில் சிவில் சமூகங்களும் கட்சிகளும் இணைத்து ஒரு புதிய வளர்ச்சிக்குப் போகவேண்டிய ஒரு தேவை வலிமையாக மேலெழுகின்றது. ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி அவ்வாறான ஒரு கட்டமைப்பின் கருநிலைக் கட்டமைப்பை உருவாக்கினால் அது எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப ஒரு பொருத்தமான வளர்ச்சியை அடையும் என்ற எதிர்பார்ப்பு சிவில் சமூகங்களிடம் காணப்படுகின்றது.

கடந்த 15 ஆண்டுகளிலும் பெரிய கட்சிகள் பலமாக இருக்கும் பொழுது அல்லது பெரிய கூட்டு பலமாக இருக்கும் பொழுது சிவில் சமூகங்களை மதிப்பது குறைவு. 2014 ஆம் ஆண்டு மன்னாரில் நடந்த சந்திப்பு ஒன்றில் சம்பந்தர் அப்போதிருந்த மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களை நோக்கி சொன்ன பதில் அதைத்தான் காட்டுகிறது. "பிஷப் நீங்கள் சொல்லுவதைச் சொல்லுங்கோ நாங்கள்தான் முடிவெடுக்கிறது" என்று சம்பந்தர் திமிராகச் சொன்னார். ஆனால் 2020 இல் கூட்டமைப்பின் ஏகபோகம் உடைந்து அதன் ஆசனங்கள் வெளியே போனபோது கூட்டமைப்பு இறங்கி வந்தது. அதன் விளைவுதான் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு கூட்டுக் கடிதம். அதாவது கட்சிகள் பலமாக இருக்கும் போது அல்லது கூட்டுக்கள் பலமாக இருக்கும் பொழுது அவர்கள் சிவில் சமூகங்களை மதிப்பதில்லை. ஆனால் கட்சிகள் பலவீனமடையும் போது சிவில் சமூகங்கள் கட்சிகளின் மீது தார்மீக தலையீட்டைச் செய்யக் கூடியதாக இருக்கின்றது. அப்படி ஒரு கட்டம் இப்பொழுது தமிழ் அரசியலில் ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் எனப்படுவது அரசாங்கத்தால் ஏற்படுத்தித் தரப்பட்ட ஒரு வாய்ப்பு. அதைத் தமிழ்த் தரப்பு தனது நோக்கு நிலையில் இருந்து கையாள முடியும். இதை கவித்துவமாகச் சொன்னால், அரசாங்கம் திறந்து விட்டிருக்கும் ஒரு மைதானத்தில் தமிழ் மக்கள் தங்களுடைய விளையாட்டை விளையாடுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக் கவிஞர் குழு

முள்ளிவாய்க்காலில் உயிர்பிழைத்து, சித்திரவதைக்குள்ளாகி, தப்பி வந்த தமிழ்ப் பெண்கள் எழுதிய கவிதைகளில் சிலவே இவை. 20இலிருந்து 60 வரையான வயதினைக் கொண்ட அவர்கள், தற்போது நாட்டில் வாழ முடியாமல், அங்கிருந்து தப்பி வந்துள்ளார்கள்.

இதனை வெளிக்கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் கீழே விபரித்துள்ளதுபோன்று, ஒரு ஆதரவுக்குழுவாக இயங்கத் தொடங்கினார்கள். இது, மெய்நிகர் சந்திப்புகளின்போது காகிதத்துண்டுகளில் எழுதத்தொடங்கும் நடவடிக்கையாகப் பரிமாணம் கண்டது. தங்கள் எழுத்துகள் வெளியிடப்படும் என்ற எண்ணம் அவர்களுக்கு அப்போது இருக்கவில்லை. சாஸ்ஷ திறவெற்றும் கவிஞர் சேரனும் படிப்படியாக இக்குழுவுடன் இணைந்து செயற்பட்டு, அவர்களுக்கு ஊக்கமும் ஆதரவும் வழங்கினர். அதன் விளைவே இக்கவிதைகள். இவ்வெள்ளிக் கவிஞர்களின் அகஉணர்வுகள் கவிவரிகளாக வெளிப்பட்டு, முள்ளிவாய்க்காலின் 15ஆம் ஆண்டு நிறைவில் அச்சுப் பதிப்பாக வெளிவருகின்றன.

**பிரான்சிஸ்:** 2020 ஜூனில், கோவிட் நடுப்பகுதியின்போது இது தொடங்கியது. அப்போது நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதைத் திரும்பிப்பார்ப்பதே கடினமானது. எங்களது வீட்டுக்கு அருகிலிருந்த வாகனத் தரிப்பிடத்தில் ஒரு பிணவறை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இருமும்போதும், நோயாளர்காவு வண்டிகளின் ஒலிகளுக்கும் நாம் பயப்படத் தொடங்கியிருந்தோம். அத்துடன், அட்டைப்பெட்டிகள் தொற்று நீங்குவதற்கு எவ்வளவு காலம் விட வேண்டும் என்றும் கவலையடைந்திருந்தோம்.

வதைகளிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் தப்பிப் பிழைத்தவர்களுக்கான வாராந்த உளவளத்துணை ஆதரவு செயற்றிட்டம் ஒன்றினை நாம் நடத்திக் கொண்டிருந்தோம் நேரில் நடக்கும் அச்சந்திப்புகளை திடீரென நிறுத்தவேண்டியிருந்தது. பொருள்கள், சிம்அட்டைகள், காதுகேள் பொறிகள், zoom மெய்நிகர் தொடர்பான வகுப்புகள் என அனைவரையும் நிகழ்நிலையில் ஒன்றிணைப்பதற்கு நேரமும் கடினஉழைப்பும் தேவைப்பட்டது. நிகழ்நிலை வகுப்புகளில் பெண்கள் ஆண்களிடமிருந்து பிரிக்கப்பட்டார்கள் அத்துடன், எங்களுக்குத் தெரிய முன்னரேயே, எமது பணியாளர் ஒருவரின் உதவியுடன், யூரியூப் காணொலிகளின் வழியாக, சித்திரவரைகலைத் தையல் பயிற்சிகளை சுயமாகப் பயின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நாங்கள் ஊசிகளையும் வரைகலைத்துணிகளையும் அஞ்சல் சேவையூடாக அனுப்பிக்கொண்டிருந்தோம்.

ஒரு காலத்தில் தங்கள் மக்களுக்காகப் போராடிய இந்த புத்திசாலி இளம்பெண்களை, கைவினைப் பொருள்களைச் செய்வதற்கு ஊக்கப்படுத்திக்கொண்டிருக்கின்றோம் என்பது எனக்கு மெதுவாகப் புலப்பட்டது. அவர்கள் தங்களது விரல்களுடன் மூளையையும் பயன்படுத்தவேண்டிய தேவையிருந்தது. நான் இவ்விடயத்தைப் பற்றி விந்தியாவுடன் பகிர்ந்தேன். அவர் மெய்நிகர் வழியே இக்குழுவிற்கு தமிழில் கவிதைகளை வாசிப்பதற்கு தாராள மனதுடன் முன்வந்தார்.

**இராகினி:** இந்தச் சந்திப்பில் அவர்கள் ஒருவரையொருவர் அன்புடன் நடத்தினார்கள் அதில் தமது நினைவுகளையும் கவலைகளையும் பகிர்ந்து கொண்டதுடன் ஒருவருக்கொருவர் ஆதரவையும் வழங்கினார்கள். பெருந்தொற்றினால் நெருக்கடிகள் ஏற்பட்டபோதிலும்கூட, இச்சந்திப்புகள் அவர்களது அன்பினதும் அரவணைப்பினதும் நட்பினதும் அடையாளமாக மாறின. இவை இக்குழுவிற்கு ஆறுதலாக அமைந்தன. அது ஒவ்வொருவரிடமும் பரஸ்பர இணையப் பயணத்தில் மறக்கமுடியாத பதிவினை ஏற்படுத்திச் சென்றன. இக்குழுவை நான் வழிநடத்தியபோது, ஒவ்வொரு சந்திப்பிலும் அவர்களிடமிருந்து வெளிப்பட்ட அன்பும் ஆதரவும் அரவணைப்பும், அவர்களைப் போலவே என்னையும் குடும்பத்தின் பாராட்டுப்பெற்ற உறுப்பினராக இருப்பதைப் போன்று உணர்வினை எனக்கு ஏற்படுத்தியது.

சித்திரவரைகலைத் தையலில் அவர்களுக்கிருந்த அனுபவமும் ஆர்வமும் இச்சந்திப்பை வலுவாக்கின. அவை ஊசிமுனையில் தொடங்கி, சித்திரவரைகலைத் தையலினைக் கற்று, பயிற்சி செய்யும் பயணத்தில் அவர்களை ஒன்றாக இணைத்தது. அவர்கள் மிக அழகான தையல்களை மேற்கொண்டதுடன், அப்பயணத்தில் நினைவுப் பதிவுகளையும் உருவாக்கினார்கள். சித்திரவரைகலைத் தையலில் பரிசுப்பொருள்களைச் செய்து தமக்குள் பகிர்ந்தும் கொண்டனர். அத்துடன் பலரும் இணைந்து சிறப்பான ஒன்றைச் செய்வதிலும் விருப்பத்துடன் ஈடுபட்டனர். இவ்வாறு இணைந்து செயற்பட்டதனூடாக, அவர்களது நேர்மறையான எண்ணங்கள், உணர்வுகள், நினைவுகள் ஆகியவற்றை ஒருவருடன் ஒருவர் பகிர்ந்து கொண்டதுடன், புதிய நுட்பங்களை ஒருவருக்கொருவர் கற்றுக்கொடுத்தும், ஆதரவுக் கற்றல்சுழல் ஒன்றினை ஏற்படுத்தியும் கொண்டார்கள். வெள்ளிக்கிழமை ஒன்றுகூடல் என்பது தவறவிடப்படமுடியாத ஒரு நாளாக ஒவ்வொருவருக்கும் மாறியது. இந்தக் கூட்டு அனுபவமானது, அவர்களது வாழ்க்கையை வளப்படுத்தியது மட்டுமன்றி, கடந்த காலங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட மனவடுக்களுக்குரிய மருந்தாகவும் மாறியது.

அனுபவங்கள் சொற்கள் ஊடாக பகிரப்பட்டபோது, இச்செயற்றிட்டம் நேர்மறையாகத் தொடர்ந்தது. இவர்களில் ஒருவர் தான் எழுதி வெளியிட்ட கவிதைகளை, இக்குழுவில் பகிர்ந்து, மற்றையவர்களிடமிருந்து பின்னூட்டல்களைக் கேட்டதனால், அவருடைய கவிதைகளை நாம் உரத்த குரலில் வாசிக்கத் தொடங்கினோம். அவருக்குக் கிடைத்த பின்னூட்டல்கள் மற்றையவர்களுக்கும் ஒரு உத்வேகத்தைத் கொடுத்ததுடன், தங்களது உணர்வுகளையும் எழுத்தில் வெளிப்படுத்தவேண்டும் என்ற உணர்வழுத்தத்தையும் ஏற்படுத்தியது. இந்த வடிவமாற்றுப் பயணமானது, அவர்களுக்குள் இருந்த கவிஞர்களைத் தட்டியெழுப்பியதுடன், உணர்வுகளையும் எண்ணங்களையும் வார்த்தைகளில் வடிப்பதற்கும் அவர்களைத் தூண்டியது. இந்தச் செயற்றிட்டம் வெளிப்படத் தொடங்கியபோது, தொடர்புக்கான புதிய வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியன. இது நலன்விரும்பிகளையும் உள்வாங்கி, இக்கூட்டுப்படைப்பு முயற்சிகளுக்கு அவர்களது பங்களிப்புக்களையும் வழங்க வைத்தது. தங்களது உணர்வுகளையும், வலிகளையும், உணர்ச்சிகளையும், ஆசைகளையும் வார்த்தைகளில் வடித்து, தங்களது அகஉலகினை பரந்துபட்ட சமூகத்துடன் பகிர்ந்துகொண்ட இக்குழு, நாளடைவில் "வெள்ளிக் கவிஞர்கள்" என்று அழைக்கப்படத் தொடங்கியது.

**விந்தியா**: என்னுடைய சொந்த வாசிப்புத்திறனையும், மொழித்திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்காக தமிழ் – ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட இருமொழி கவிதை நூல்களைத் தேர்வுசெய்தேன் "தொலைக்கப்பட்ட மாலைப் பொழுதுகளும், தொலைந்துபோன உயிர்களும்" (Lakshl Holmstrom & Sascha Ebelign ஆகியோரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தொகுக்கப்பட்டது), பாக்கியநாதன் அகிலனின் "சாட்சிகள் யாரும் அப்போது இருக்கவில்லை" (கீதா சுகுமாரனால் மொழிபெயர்க்கப்பட்டது) ஆகியன தொடங்கி சேரனின் "எரிந்து கொண்டிருக்கும் நேரம்" (Lakshl Holmstrom இனால் மொழிபெயர்க்கப்பட்டது) வரை அவற்றில் இருந்தன. தொலைவு, இடமாற்றம், தனிமையுணர்வு உணர்வுகள் மேலோங்கியிருந்து ஒரு நேரத்தில், பெரும்பாலான விடயங்கள் என்னவென்றே தெரியாது இருந்த நிலையில், இணைந்து வாசிப்பது என்பது அவசியமான ஒன்றாகத் தோன்றியது. இருந்தும், அதுவரை நேரில் சந்தித்திருக்காத நாங்கள் (நாங்கள் இறுதியாக நேரில் சந்திப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு வருடம் எடுத்துக்கொண்டது) வாராந்த இணையச் சந்திப்புகளில் வாசித்த இந்த கவிஞர்களதும் மொழிபெயர்ப்பாளர்களதும் வார்த்தைகளால் நாங்கள் ஊக்கமடைந்தோம். குழுவாக முடிவு செய்த தலைப்புகள் மற்றும் தூண்டுதல்களுக்குரிய பதிலாகவும் பிரதிபலிப்பாகவும் எழுதுவது என்பது இலகுவிலேயே ஒரு விளையாட்டுச் செயற்பாடாகத் தொடங்கியது. அடுத்துவந்த மாதங்களில், வெள்ளிக் கவிஞர்களின் இதயங்கள், மனங்கள், மற்றும் கைகளில் இருந்துவெளிப்பட்ட எண்ணங்கள், குறிப்பேடுகளிலும் கடதாசித் துண்டுகளிலும் எழுதப்பட்டும், கைத்தொலைபேசியின் குறிப்பேட்டுச் செயலியில் பதியப்பட்டும், கவிதைக்குழுவின் அரட்டைகளில் பகிரப்பட்டும் கவனத்துக்குரியவையாக மாறின. அவர்களது அரவணைப்பும் ஆக்கத்திறனும் ஒவ்வொருவரது கவிதைகளை வாசிக்கும்போதும் மற்றையவர்கள் அவர்களைப் பாராட்டி, ஊக்கப்படுத்தியதும் என்னை வியப்பில் ஆழ்த்தின. அவர்களது வார்த்தைகள் அவர்களது வேதனை, விரக்தி, இழப்பு, ஏக்கம் மற்றும் வலி என்பவற்றை மட்டும் வெளிப்படுத்தவில்லை அவர்களது கனவுகளையும், துணிவையும், நம்பிக்கையையும்கூட தெரியப்படுத்தின. இப்பெருந்தொற்றானது எங்கள் அனைவர் மீதும் எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன. எனக்கோ, வெள்ளிக்கிழமை மதிய நேரங்களில், இளைய மற்றும் வயதான, நம்பிக்கையான, வளமான கவிஞர்களுடனும், தயக்கத்துடன் காணப்பட்ட, ஆனால் திறமைவாய்ந்த மற்றையவர்களுடனும் காணொலி மூலமான அழைப்புக்கு ஊடாகச் சந்திப்பது என்பது, சமூகத்தின் ஊடாக, ஒற்றுமையின் ஊடாக, நட்பின் ஊடாக என்ன சாத்தியமாகின்றது என்ற நம்பிக்கையினைத் தந்ததுடன் இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கா விட்டால் இந்த வார்த்தைகளைக் காகிதத்தில் பதிந்துகொள்வதற்கு எமக்கு நேரம் கிடைத்தி ருக்காமல்கூட போயிருக்கலாம். வெள்ளிக் கவிஞர்களுடன் செலவிடுவதற்கு எனக்குக் கிடைத்த நேரமும் பகிர்ந்துகொண்ட கவிதைகளும் என் மனதில் எப்போதுமே அழியா நினைவுகளாகப் பதிந்திருக்கும்.

**சாஸ்:** வெள்ளிக் கவிஞர்களுடன் மிகவும் தாமதமாக, அதாவது 2021 இன் இறுதிப்பகுதியில்தான் நான் இணைந்துகொண்டேன். இக்குழு எழுதியிருந்த பெரும்வேலைகளை மொழிபெயர்ப்பதற்கு ஒருவர் தேவையெனக் கேட்டு ருவிற்றர் வழியாகத் தொடர்பு கொள்ளப்பட்டேன். நான் இம்முயற்சியில் என்னையும் இணைத்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். என்ன வரப்போகின்றது என்று தெரியாமலேயே முதலாவது சந்திப்பில் கலந்துகொள்வதற்கான Zoom வழியே உள்நுழைந்தேன்.

வாழ்வில் மிக மோசமான துன்பங்களிலிருந்து தப்பி உயிர்பிழைத்துவந்து ஒரு பெண்கள் கூட்டம், பெருந்தன்மையுடனும் அன்பாகவும் என்னை வரவேற்றார்கள். வலிகளிலிருந்து விடுபடுவதற்காக தங்களது வார்த்தைகள்ஊடாக, கவி வரிகள் ஊடாக ஒருவரையொருவர் தாங்கிப்பிடித்து உதவிசெய்யும் பெண்களை நான் சந்தித்தேன். வலிகளிலிருந்து அழகான ஒன்றை உருவாக்கும் திறமை மட்டும் அவர்களுக்கு இருக்கவில்லை. மாறாக, நேரடியாகச் சந்திக்க முடியாத இந்த Zoom மெய்நிகர்ப்பரப்பினை இரக்கமும் ஆதரவும் கொண்ட இடமாக மாற்றியிருந்தார்கள். பெருந்தொற்றுக் காலத்தில் எங்களைப் பிரித்துவைத்திருந்த சுவர்களும் எல்லைகளும் இந்த வாராந்த சந்திப்புகளில் உருகி, கரைந்துபோயின: கவிதைகளைப் பகிர்ந்து கொண்டமை எங்களுக்குள் எவ்விதமான தடைகளும் இல்லை என்பதுபோன்று உணர வைத்தது.

நான் மொழிபெயர்த்த கவிதைகளை ஒவ்வொரு வாரமும் கொண்டுவந்து, அவர்களுக்கு வாசித்துக் காட்டுவேன். அவர்கள் கவிதைகளில் பயன்படுத்திய சொற்களின் நோக்கத்தை தெளிவாகப் புரிந்துகொண்டு, அதனை வழுவற்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவேண்டும் என்பதற்காக நான் கவிஞர்களிடம் கேள்விகள் கேட்பேன். 2022 இல் எங்களது வழக்கம் மாறியது. மொழிபெயர்ப்புக்கள் பற்றி கதைப்பதற்கு இச்சந்திப்புக்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, 'சாதாரண' எழுத்துப் பட்டறைகளாக நான் அவற்றை நடத்தத் தொடங்கினேன்: அச்சந்திப்புக்களிலும் வீட்டிலும் செய்வதற்காக கவிஞர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல், மற்றையவர்களின் கவிதைகளை வாசித்தல், தமிழில் கவிதைகளை வாசித்தல், நடைவடிவம் மற்றும் நுட்பம் ஆகியன தொடர்பாக உரையாடுதல் மற்றும் எழுத்தாளர்களாக அவர்களது அபார திறமைகளை மேம்படுத்துவது பற்றி விவாதிப்பது ஆகியன இதில் உள்ளடங்கின.

அவர்களிடமிருந்த வெளிப்பட்ட கவிதைகள் மிகவும் அபாரமானவையாகவும், மனதை நெருடுபவையாகவும், மிகவும் ஆழமாக கருத்துகளைக் கொண்டவையாகவும் இருந்தன. இந்த வெள்ளிக் கவிஞர்களது கவியுலகப் பயணத்தில் அவர்களுடன் இணைந்து பயணித்தது எனக்குக் கடைத்த பாக்கியமே. என் மனதில் எப்போதும் இருக்கப்போவது அவர்களிடம் வெளிப்பட்ட, சிரிப்பு, அன்பு, கண்ணீர், ஆறுதல்படுத்தல், ஒருவரையொருவர் தாக்குதல், மற்றும் ஒருவர் வேதனையில் மற்றயவர் தாங்கிப்பிடித்தல் போன்றன மட்டுமல்ல, மாறாக, அவர்களது எழுதுகோல்களிலிருந்து உருவெடுத்த முக்கியமானதும் சக்திவாய்ந்ததுமான கவிதைகளும்தான்.

**சேரன்:** இனப்படுகொலையிலிருந்து உயிர்தப்பியவர்களை உள்ளடக்கிய, தனித்துவமான 'வெள்ளிக் கவிஞர்களுடன்'கவிதையையும் கவிதையியலையும் பற்றி உரையாடுமாறு என்னிடம் பிரான்ஸிசும் விந்தியாவும் கேட்டபோது, உணர்வுபூர்வமானதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதுமாக அனுபவமாக அது அமையப்போகின்றது என்ற எதிர்பார்ப்புடன், எவ்வித தயக்கமுமின்றி உடன்பட்டேன். பேரழிவுக்காலத்தில் கவிதைகளின் வகிபாகம் தொடர்பாக றுவாண்டா, மியான்மார் மற்றும் இந்தோனேசியாவின் ஆச்சே ஆகிய இடங்களிலிருந்து உயிர்தப்பிவந்து, நாவலாசிரியர்களாக, கவிஞர்களாக, ஆக்கபூர்வமான புனைகதை சாராத எழுத்தாளர்களாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த பெண்களுடன் இணைந்து பணியாற்றியதும் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டதும் எனக்கு நினைவுக்கு வந்தன.

ஆரம்பத்தில் Zoom ஊடாகவும், பின்னர் முழுநாள் நேரடிக்கலந்துரையாடலிலும், வெள்ளிக் கவிஞர்களுடன் நடந்த சந்திப்புகள் கவிதைகளை எழுதுவது, மனஅழுத்தம், மற்றும் இவ்வாறான உணர்வுபூர்வமான கவிதைகளைத் 'நேர்த்தி செய்வது' ஆகியன தொடர்பில் எனக்கிருந்த பார்வையினை பெரிதும் மாற்றின.

படைப்பாக்கம் கற்பிக்கப்படக்கூடியதல்ல என்பதை நான் அறிவேன். அது தானாக உருவாகவேண்டும். இருப்பினும், செய்நேர்த்தி என்பது கற்பிக்கப்படக்கூடியது, அதுபோன்றே மொழியின் நுணுக்கங்களும் கற்பிக்கப்படக்கூடியதே.

"நேர்த்தி செய்பவர்" என்னும் வகிபாகத்தில் நான் வெள்ளிக்கவிஞர்களுடன் இணைந்துசெயற்படவில்லை. அவர்களுக்காக கதைக்கமுடியாது என்பது எனக்குத் தெரியும். அவர்களது தனித்துவமான அனுபவங்களையும் குரல்களையும் என்னால் பொருத்திப்பார்க்க முடியாது. படைப்பாக்க உணர்வுத்தோழமை என்று நான் அழைத்துக்கொள்ளும் விடயத்தில்தான் நான் அவர்களுடன் இணைந்து உரையாடினேன். பூகோளஅமைவிட, பாலின, இன மற்றும் சாதி வேறுபாடுகளிருந்து புலப்படும் அறிவுசார் சிறப்புரிமைகளை இணைக்கும் ஒரு வலுவான கலைக்கருவியாக படைப்பாக்க உணர்வுத்தோழமை இருக்கும் என நான் கருதுகின்றேன்.

**வதைகளிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும்
தப்பிப் பிழைத்து வாழ்ந்துவரும்
இவ்வெள்ளிக்கவிஞர்களின் வலுவான
படைப்புக்களுக்கு இக்கவிதைகள் ஆதாரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 18, முள்ளிவாய்க்கால்

பதினைந்து ஆண்டுகளாகியும்
மறக்க முடியாத வலி
நீர் வழியில் தொடங்கி
நீர்க்கரையில் முடிந்த
இனப்படுகொலையின்
நேரடிச் சாட்சிகளில்
நானும் ஒருத்தி

கண்முன்னே சிதறி எரிகிறது
முள்ளிவாய்க்காலெனும்
யாரும் அறியாதிருந்த
ஓர் அழகிய கடற்கரைக் கிராமம்.
காதைக் குடைகிறது
மக்களின் அவலக்குரலும், அழுகையும்

அடுத்தது என்ன செய்ய ?
எதுவும் புரியாதவளாக
திருவிழாவில் தொலைந்த
குழந்தை போல நானும்

திக்கறியா நிலையில்
எக்கரைக்குப் போவேன் ?

கொத்துக்குண்டுகளில்
சிதறுண்ட உடலங்கள்
ஆங்காங்கே கிடக்க
உயிர் தப்பிய எம் உறவுகளை
அள்ளித் தூக்கி
வாகனங்களில் ஏற்றி
மருத்துவமனைக்கு
அனுப்பி விட்டு
திரும்பிப் பார்த்தால்
இந்த நிமிடம் வரை
உரையாடியவர் கூட
விமானக்குண்டு வீச்சில்

இறந்து போகிறார்

எப்படிக் கூறுவேன்
கொரேக்காட்சியை?
எண்ணவே நெஞ்சம்
இயங்க மறுக்கும்

ஒரு வீட்டில்
அனைவருமே இறந்து
கருகிய உடல்களும்
தசைகள் வேறாக
உடல்
ஆங்காங்கே சிதறி
கருகிய நிலையில்
கருவுற்ற தாயின்
வயிற்றைக் கிழித்தபடி குழந்தை.
என்ன பிழை
செய்ததிந்தக்குழந்தை
தமிழ்த் தாயின் வயிற்றில்
பிறந்தது தான் தவறா?

பனை மரங்களின் இடுக்குகளில்
வௌவால்கள் போல் தொங்கிய படி
எங்கும் சிதறிய
தசைத் துண்டங்கள்
யார் எவர் இறந்தார்கள்
என்றும் தெரியாத நிலை

கத்தி அழவும் முடியாமல்
மரத்துப்போன மனசோடு
அனைவருடன் நானும்
இரத்தக்கறைகள் படிந்த
கைகளுடன் அழுவதற்கு கூட
நாதியற்றவளாக
நடக்கிறேன்.

கண்முன்னே கணவனை,
மனைவியை, பிள்ளையை
உறவுகளை இழந்தவர்கள்
எப்படி இருப்பார்கள்!
உங்களால் கற்பனை செய்து கூட
பார்க்க முடியாது

பல மாதங்களாக
ஒரு நேரக்கஞ்சி மட்டுமே
எம் மக்களின் உணவாக
அன்றை நாள்களில்
அக் கஞ்சிக்காக சென்ற
சிறுவர்கள் மீது படையினர்
விமானக்குண்டுகளை வீசினர்
எத்தனை சிறார்கள்
சின்னாபின்னமாகி
துடி துடித்து இறந்து மடிந்தனர்
இன்றும் கூட நெஞ்சம் வெடிக்கும்

அக்குழந்தைகள் என்ன
பாவம் செய்தார்கள்
தமிழராய் பிறந்ததை தவிர?
இனப்படுகொலையில்
ஒரு குறிப்பிட்ட சதுர நிலத்தில்
எம்மை ஒடுக்கி
நச்சுவாயுக்களாலும்
நச்சுப் புகைக்குண்டுகளாலும்
நசுக்கி எறிந்தனர்.

இறுதி நாள்கள் என்று
இன்று கூறுகின்றேன்
அன்று நமக்குத் தெரியாது
அன்றைய நாள்கள்
தான் முள்ளிவாய்கால்
இறுதி நாள் என்று...!
நான் நின்ற இடத்திலிருந்து
குறுகிய தூரத்தில்
குழந்தைகள் பசியில்
துடித்து அழுவதையும்
பசியாற்ற முடியாமல்
பெற்றவர்கள் அழுவதையும்
கண்டேன்

இராணுவத்தின் எறிகணைகளும்
துப்பாக்கி ரவைகளும்
என் தலைக்கு மேலாக
செல்லும் போது கூட
எனக்கு அக்குழந்தைகளின்
அழுகையே கேட்டது மனதில்

அவ்விடத்தை விட்டு
நகர்ந்து சென்று
சில நிமிடங்களில்
எங்கோ இருந்து வந்த
எறிகணைகள் அவர்களின்
தற்காலிக தறப்பாள் குடிசைகள்
மீது வீழ்ந்து வெடித்து
மக்கள் சிதறுண்டு
என் கண் முன்னே கதறி அழுது
துடித்து இறந்தார்கள்.

காயமடைந்தவர்கள்
எம்மை காப்பாற்ற
யாரும் இல்லையா இவ்விடத்தில்??
வானைப் பிளந்தது அவர்கள்
அவல ஓலங்கள்

நானும் அவ்விடத்தில்
காயமுற்றிருந்தேன்
அவர்களை காப்பாற்ற
முடியாத கையாலாகாத
நிலையில் துடிதேன்.

எங்கோ ஓர் மூலையில்
இருந்த எம் சகோதரர்கள்
பலர் தம் உயிரையும்
பொருள்படுத்தாது
அனைவரையும் ஓடி வந்து
அவ்விடத்திலிருந்து
காப்பாற்றினார்கள்
காயங்களுக்கு மருந்து கட்ட
மருத்துவமனைகள் இல்லாது
அல்லல்பட்டார்கள்
இறந்தவர்களை
அடக்கம் செய்ய கூட
முடியாமல் மக்கள் திணறினார்கள்
உறவுகளின் உடலங்களை
அவ்விடங்களிலே சிலர்
விட்டுச்செல்ல சிலபேர் இறந்த
இடங்களிலேயே
கிடங்கு வெட்டி புதைத்து விட்டு
கடந்து செல்கிறார்கள்

எமக்கு ஏன் இத்தனை
கொடுமைகள் நடந்தன?

விழித்திருப்போம்
எமது விடுதலை
எம் கைகளில் மட்டுமே

மீண்டும் தளிர்ப்போம்
விழுதெறிவோம்
பெருவிருட்சமாகக் கிளைவிட்டெழுந்து
எல்லாக்கரங்களும் சேரும் ஓர் நாளில்
ஒளி தருவோம்

– க. பொம்மை

# போர்க்களத்தில் மலர்ந்த காதல்

வீரமும், காதலுமாய்
தாய்த்தேசத்தை மீட்கின்ற
புனிதப் போரில்
இணைந்த உறவுகள் நாம்.

அவன்
வீரத்திலும்,
விவேகத்திலும்
நல்லொழுக்கத்திலும்
சிறந்து விளங்கினான்
அனைவரிடத்திலும்
அன்பு பாராட்டி மகிழ்ந்தான்
மக்களின் துன்பத்தை
தன் துன்பமாகக் கருதினான்
நானும் விதிவிலக்கல்ல
அவன் அன்பில் கட்டுண்டேன்
பல வருடங்களாக உறவாடினோம்
நெடிய நீண்ட பயணத்தைக்
கடந்து வந்தோம்

அன்றொரு நாள்
இரு இதயங்களும்
திசைகொன்றானோம்
விதியின் விளையாட்டில்

என் காதோரம்
வந்த செய்தியது.
பொய்யாகாதோ என
அன்று கதறித் துடிதுடித்து
துவண்டுதான் போனேன்!
பேரிடியாக வந்த செய்தியது

அன்பானவனின்
செய்தியினைக் கேட்டு
அதிர்ந்தேன்
நொருங்கியது
என் சிறு இதயம்

பதினாறு வருடங்கள்
கடந்து விட்டபோதும்
அவனை மறப்பதற்கு
என் மனதில் துணிவில்லை
மறக்கவும்தான் முடியவில்லை
காலத்தின் கோலத்தால்
கட்டுண்டு தவிக்கின்றேன்

உயிருடன் இருப்பதாய்
கனவினில் வந்து
கதை கூறுகிறான்
நான் தேடி வருகையில்
கானல் நீராகி மறைகிறான்
தன்னை மறந்ததாய்
என்னைக் குறை கூறுகிறான்

எப்படி மறப்பேன்
உன் நினைவுகளை?
எங்கே தேடுவேன்
உன் உயிர் அசைவுகளை?
என் உயிரல்வா நீ

நீ கடைசியாகச்
சொன்ன வார்த்தைகள்
இன்றும் என் காதோரம்
ஒலிக்கக்
கண்ணீரில் கரைகின்றேன்
உன் நினைவுத் தடங்களுடன்.

– க. பொம்மை

# காணாது தேடிய விழிகள்

*– 2000ம் ஆண்டு நடந்த உண்மைச்சம்பவத்தை தழுவிய நினைவுப்பகிர்வு –*

தாகத்திற்கு தண்ணீர்
எடுக்கச் சென்ற
என் தோழியவள்
எதிரியிடம் அகப்பட்டு
சின்னா பின்னமாகிய
தருணமதில்அவள்
விறைத்த உடலை
மீட்ட கணப் பொழுதில்
என் உணர்வுகளை
சொல்லிட மொழியில்லை

காலையில் சென்றவளை
காணவில்லையென
தேடியலைந்த பொழுதில்
மாலை மங்கிய நேரமதில்
இறந்த அவள் உடல் கண்டு
என் இதயம் ஓர் கணம்
நின்று போனது
தொடுகையின் போது
சில்லென்ற அவள்
உடல் கண்டு
உள்ளம் உடைந்து
சுக்கு நூறாகியது

என்னோடு ஒன்றாக
ஓர் தட்டில் உணவுண்ட
என் தோழி
உயிரற்ற உடலாக
குண்டு துளைத்த
காயங்களும்
சிகரட் சுட்டுக்காயங்களுடன்
வெயிலில் வாடி
கருமையாயும்
உருக்குலைந்த
அவள் முகம்
என்னுள் ஏதோ
மாற்றங்கள்
உணர்வுகள்
மன வேதனையில்

என் தோழி
உனக்கா இந்த நிலை
கண்ணீர்
என்னையறியாமல்
கன்னம் வழியே
உருண்டோட
தொட்டுத் தூக்கி
என் தோளில் சுமந்தேன்
உயிரற்ற அவள் உடலை

எதிரியிடம் அகப்படாமல்
என் தோழியை
மீட்டதில்
மனம் திருப்தியுடன்
பாட்டு பாடி ஆடி
மகிழ்வித்த துடிதுடிப்பான
தோழியவள்
அவள் கனவுகளை
சுமந்தபடி
நடக்கின்றேன்
நாளை அவள் கனவு
நனவாகும் என்ற
நம்பிக்கையில்

அழகாக பாடல்
பாடி மகிழ்விப்பவள்
அன்று என் தோளில்
அசைவற்று கிடந்தாள்
இசைச்சிட்டாக
இசைமறைந்தாள்

காலங்கள் கடந்து
யுத்த மௌனிப்பின்
மாறாத வடுக்களுள்
அந்நிய தேசமதில்
கலைந்த கனவுகளுடன்
நான் இன்று.

– க. பொம்மை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனவுகளும் கானல் நீராய்...

போர்ச்சூழல்
இடம்பெயர்வு
வெறுங்கை
பசி
தாகம்
பயம்

இருப்பிடம்
மரநிழல்
மழை
துயிலெழுப்பும்
மயிர்க் கொட்டிகள்
தூக்கம்
தொலையும்
முகாம்
வாழ்க்கை

சொந்த நாடு
ஏதிலி
குடிநீர்
மழைநீர்

இலங்கை
இந்தியா
படையினர்
அட்டூழியங்கள்
தமிழச்சி
கைவிலங்கு

கொத்துக் குண்டுகள்
பதுங்குகுழி
மூடப்பட்ட சடலங்கள்
மரங்கள்
தொங்கும்
தசைத் துண்டங்கள்

மாற்றுத்திறனாளிகள்
உறவுகள்
இழந்தவர்கள்
உடல்
அதனுள்
குண்டுச்சன்னங்கள்
மெல்லக் கொலையுறும்
சிறைக் கைதிகள்

கானல் நீராய்
கனவுகளும்
கொதிக்கும் எம் நெஞ்சம்.

எங்களின் வாழ்விலே
அணையாத ஊற்றாக
சோகங்கள் சூழ்ந்தன
செந்தணலில் களமாடி
வீழ்ந்த எம் மறவர்களின்
நினைவு எமை வதைக்கின்றதே!

எம் உயிர்க்கு
எம் கலாசாரத்திற்கு
பாதுகாப்பு அரண்களாய்
இருந்தவர்களை எம் மனம்
நன்றி உணர்வோடு
தாழ்பணிந்து தேடுகிறது

தூய்மையும் காற்றும் தொடர்ந்து வீசிய
உங்கள் ஆட்சியில்
நாம் கண்ட
இன்பத் திருநாட்டை
எப்படி மறப்போம்?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின்
உறவுகளின் ஏக்கங்கள்
துரோகிகளின் நடத்தையால்
தமிழர்களே கவனமாக
இருங்கள் என்று
சிலர் சொல்வதைக் கேட்க
எம் காது வெடிக்கின்றது.

வந்தவர்களை எல்லாம் வாழ
வைத்த தமிழர்கள்
தம் நிலம் தொலைத்ததேனோ?
கொதிக்கும் எம் நெஞ்சம்.

– சாரா

# வேதனைகள் ஏராளம் அது பலவிதம்

சின்னஞ்சிறுவயதில்
சிட்டுக்குருவியாய்
சிறகடிக்கவேண்டிய காலமதில்
பதுங்கு குழிகள்
எங்களது வாழிடமாய்.

இயற்கையின் இசையை இரசித்ததில்லை
வெடியோசையும்
யுத்தவிமானங்களின்
இரைச்சலகளும்
எம்வாழ்வோடு பின்னிப்பிணைந்தவையாகின

சில்லென்று வீசும்கடற்காற்றையும்
நெற்கதிர்களை
வருடிச்செல்லும் தூய
இசைக்காற்றையும்
சுவாசிக்க வேண்டிய நாம்
நச்சுக்காற்றை சுவாசித்தோம்

அமைதியாக ஆலயத்தில்
வழிபடவேண்டிய நாம்
ஆலயமே வைத்தியசாலையாய்

பள்ளிப்பருவமதில்
பட்டாம்பூச்சிகளாய்இல்லை
பாதுகாப்புதேடும்
நிம்மதியற்றவர்களாய்

பட்டம் பெறவேண்டிய
பலர் வாழ்க்கை
பாழாய்ப்போன
பகல் கனவுகளாய்

திசை தெரியா பறவைகளாய்
திசைமாறிய பறவைகளாய்
ஆதரவற்றவர்களாய்
சுதந்திரமற்றவர்களாய்

நாணற்புற்களாய் இப்போ
மது மாது பிரியர்களாய்
விதவைகளாய்
கைவிடப்பட்டவர்களாய்

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காய்
காணாமல் போபவர்களாய்
விழியா தூங்குபவர்களாய்
தூங்கா விழியுடன்
ஏக்கத்துடன்
காத்திருக்கும்
உறவுகளாய்
இருப்பிடங்களை
இழக்கின்றோம் எம்
வரலாற்றை இழக்கின்றோம்
எம் நாட்டில் நாம் அடிமையாக

ஈழம் தமிழர் தேசம்அங்கே
தமிழராய் பிறந்ததால்
நாம் படும்
வேதனைகள் ஏராளம்
அதுவும் பலவிதம்

– சாரா

# ஓலம்

எங்கும் ஓலம் எதிலும் ஓலம்
இன்றுவரை ஒவ்வொருவர் காதிலும்
கேட்டுக்கொண்டே இருக்கிறது
ஓலம்.

செந்நிறமாக மாறியது நந்திக்கடல்
நீ வெம்பி அழுதமை யாரறிவார்?

பிணக் குவியல்கள் கிடந்தன அன்று

யாதும் அறியாத பிஞ்சுக் குழந்தைகள்
மூச்சுத் திணறி
முனகிச் செத்தன
அன்று

நீதித் தாயும் செய்வதறியாது
கண்மூடி வாய்மூடி
மௌனம் காத்த நாள் அல்லவா
மே 18 .

தமிழரின் மறக்கமுடியாத நாள்
கனத்த நாள் கண்ணீர் நிறைந்த நாள்
காவியமான மக்களின் நினைவு நாள்
வேதனை நாள்
மண்ணும் விண்ணும்
கண்ணீர் வடித்த நாள்

முள்ளிவாய்க்கால் முடிவல்ல
எமது தியாகங்கள் கூறும்
புனித இடம்
வாழும் வரை நினைவில் நினைக்க
வேண்டிய நாளல்லவா இது?

என்
இதயத்தில் இருப்பதோ இமையமளவு
இதழால் இயம்பியது
இவ்வளவே!

– சாவித்திரி

# ஆசை

கருவறையில் இருந்து பார்த்த முகத்தை
மகிழ்வித்து பார்க்க
நிச்சமில்லாத வாழ்க்கையில்
நாளை விடிய விட்டு எழும்ப
பிறப்பின் போது நம்மை அழவைத்தவர்களுக்கு
இறப்பில் ஒரு துளியை தர
இருட்டில் நீ வருவாய் என தூங்காமல் இருப்பேன் அது
உன்னை காணக்கூடாது என்ற
நித்திரையில் கண்ணீர் வர கனவு என நினைத்து எழ
சிறுவயதில் இருந்து நான் பயின்ற என் மொழியை
இறக்கும் வரை பயன்படுத்த
ஆசை.

– சிறிதேவி

# வாழ்க்கை

விரும்பியபடி பிறப்பெடுக்கும்
உரிமையை மட்டும்
இறைவன் எனக்கு வழங்கியிருந்தால்
மறு பிறவியே வேண்டாம் என
மறுத்திருப்பேன்.

எனது ஆசைகள் கருகிப்போக
விருப்பேதுமின்றியே மானிட அங்கமாய்
புமியில் ஜனனம்.

பிறப்பென்பது பொதுவானாலும்
வாழும் சுழல் ஒன்றல்லவே,
கற்பனைத் துள்ளல்கள்.
வாழ்கைப் பயணத்தை குதூகலிக்கச்
செய்தன.

எதிர்காலம் இனிக்கும் என்ற அதீத நம்பிக்கை
கடந்தகால கசப்புகளை காணாமல் ஆக்கின
காலம் கடக்கையில் புரிந்தது வாழ்க்கை
என்பது ஒரு யுத்தக்களம் என்று.

கணம் தோறும் கண்ணுக்குத் தெரிந்தும்
தெரியாமலும்
பல நூறு எதிரிகள் போர் தொடுத்த படி

அப் போரில் எதிர்த்து நின்றாலும்
பணிந்து போனாலும் பாதிப்பு என்றுமே
எமக்கானதாய்

ஆயிரமாயிரம் விமர்சனங்கள்
விஷம் தோய்த்த வார்த்தைகள்
அம்புகளாய்ப் பாய்ந்து
மனதை ரணகளமாக்கும்

வாழ்க்கை, அது கற்று தந்த பாடங்களோ
ஏராளம் ஏராளம்
பழம் தேடும் பறவைகளை போல்
பணம் தேடும் உறவுகள்
பயன் இல்லை என்றாலே
பதறி ஓடிவிடும் காலமிது.

கடவுளின் வரமான
சில நட்புகள் கூட பல சமயம்
சாயம் போகத்தான் செய்கின்றன

அவதூறு கூறுவதே அயலவரின்
கடமையாகின்றது
இவை கண்டு கலங்கி நிற்கையிலே
ஒன்றோடு ஒன்று தொடர்கதையாய்
மின்னலும் இடியோசையுமாய்
நோய்களும் என்னை வதைத்து
சென்றிட

வாழ்க்கை என்ற சக்கரத்தில்,
மாறி மாறி வரும் இன்ப துன்பம்
எமக்கு மட்டும் ஏனோ
துன்பம் ஒன்றே எம்மோடு உறவாட

துன்பம் என்பதறியாத துள்ளித்திரிந்த
காலம் மறைந்து
இன்பமென்பதறியா காலம்
ஆனதேனோ
இன்பக்கடலில் வாழ்ந்த குறிப்பிட்ட
காலம் மறைந்து
ஏனோ நான் இன்பம் என்றால்
என்னவென்று
இன்று வரை உணர்ந்ததில்லை
இது என் வாழ்க்கையின் விதியா

இருப்பினும் உயிர் சுமந்து
வலி நிறைந்து
உடல் சோர்ந்து போனாலும்
இலவு காத்த கிளி போலே
என்வாழ்க்கையும் ஆகாது என்ற
அசையா நம்பிக்கையோடு

இந்த வாழ்க்கையை வாழ்வதற்காய்
இன்னமும் நம்பிக்கையுடன் காத்து
நிக்கின்றேன்
புதுமையை எதிர்பார்த்து.

– சாவித்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் எமக்கு முடிவல்ல ஆரம்பமே!

மானிடராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும்.
உண்மை தான் .
அதிலும் தமிழராய்ப் பிறப்பதற்கு
என்ன தவம் செய்தோமோ தெரியவில்லை

கல்தோன்றி மண் தோன்றாக் காலம்
வாளோடு முன் தோன்றிய மூத்த குடியாம் நம் தமிழ்க் குடி.
ஆனால்
இப்போது நாம் எந்தக் குடி என்று சந்தேகம் வருகிறது.

மாபெரும் வீரன் வழிகாட்டிய
எம் தேசம் எங்கே?
மாபெரும் வீரம் படைத்த எம் மக்கள் எங்கே?

கரிகாலன் வழியில் கம்பீரமாய் உலாவியவர் நாம்
இன்று,
கதியற்றுப் போனதுவோ தமிழ்த் தேசம்?

ஒற்றைத் தலைவன் மேலிருந்த நம்பிக்கையில்
ஒராயிரம் இடப்பெயர்வுகளை கடந்தாலும்
தன்நம்பிக்கை தளராத எம் கனவுகள்
அனைத்தும் அந்த முள்ளிவாய்க்காலுக்குள் முற்றுப் பெறுமா?

இல்லை

மது மாதுக்களுக்கு அடிமையான அந்த அரக்கர் கூட்டம்
எம் அப்பாவிப் பெண்களை மானபங்கப் படுத்தியதையும் ,
இந்த கொடூர நாளில் கேட்ட மரண ஓலத்தையும்,
எமக்குச் செய்த சித்திரவதைகளையும்
மறப்போமோ இந்நாளில்?
மே.18 என்றாலே மேலதிக நினைவுகளும் வலிகளும் மேலோங்கும்
நாளது.

முள்ளிவாய்க்கால் எமக்கு முடிவல்ல.
ஆரம்பமே.

– சாவித்திரி

# முள்ளிவாய்க்காலை மறந்திடல் முடியுமா?

ஆண்டுகள் பதினைந்து
கடந்தும்
ஆறமுடியாத சோகம்
நெஞ்சை வதைக்கிறது
நினைவுகளின் கணத்திலிருந்து
மீள முடியவில்லை

கொத்துக் கொத்தாய்
குண்டுகள் போட்டு
முப்படை கொண்டு
மூர்க்கத்தனமாய் தாக்கி
முடிவில்லா துயர் தந்த
முள்ளிவாய்க்காலை
மறந்திடல் முடியுமா?

எதைச் சொல்ல?
எதை விட?
பட்டதுயர் இயம்பிட
இப் பிறப்புப் போதாது
பொழிந்த குண்டு மழையில்
சிதறிய உடல்களும்
சிந்திய குருதியும்

கட்டிய கணவன்
கண் முன்னே சிதற
பெற்ற குழந்தை
உடல் கிழிந்து துடிக்க
கர்ப்பிணிப் பெண்ணின்
வயிறு கிழிந்து
குற்றுயிராய் மகவு தெரிய,
பசியில் குழந்தை
அன்னை இறந்தது
தெரியாமல் மார்பில்
பசி தீர்க்க
துடித்த குழந்தையையும் கண்டு

நினைவுகளின் வலியில்
கண்ணீரில் மிதக்கும்
விழிகளைக் கட்டுப்படுத்த
இயலவில்லை.
வலி கண்டு
துடித்த இதயங்கள்
இன்றும் துடிப்பதை
யார் அறிவார்?
மரணத்தின் வாசலில்
உயிர்ப்புடன் போராட்டம்

முடியவில்லை முடியவில்லை
மறந்திடத் தெரியவில்லை
மறக்கவும் முடியவில்லை
வலியுடன்
மனநிம்மதியின்றி
வாழ்ந்திடும் கொடுமை
எமக்கு ஏன் இறைவா?

முள்ளிவாய்க்கால் வலி
மே மாதம் மட்டுமல்ல
வாழ்நாள் முழுக்க
மறக்கவொண்ணா
நினைவுகள்
மனதால் உடைந்து
மகிழ்ச்சியை இழந்து
வேதனைத் தீயில்
வெந்து கருகி
நடைப்பிணமாக
நாளைய சந்ததிக்காய்
தொடர்கின்ற பயணம்.
மௌனத்தில் தொலைத்த
முள்ளிவாய்க்கால்
மண்ணே
உன் மடி சுமந்த
எம்மவருக்காய்
வணங்குகிறேன் உன்னை.
கலையமுதினி

என்னவனே கலங்காதே
கல்லறை முன்னின்று
கண்ணீர் விடாதேஉன்
துன்பத்தை தாங்கும்
சக்தி எனக்கில்லை
விதியா சதியா
பிரிவு தந்தது
நம் யுத்த பூமியே
நம்பிரிவை ஏற்கட்டும்
உனை பிரிந்த போதும்
உனைக்காணாத போதும்
உன் நினைவே சுவாசமாக
வாழ்ந்த போதும்
நீ வரவில்லையே

எனக்குத் தெரியும்
உன்னால் வரமுடியாத
சூழல்
இருண்ட அறையில்
அத்தனை சித்திரவதைகளிலும் நீ
என் ஒருத்திக்காக
காத்திருந்தாய்
அறிவேன் நானும்
வருந்தாதே

கண்ணீர் விடாதே
என் அன்பே
நம் காதல்
காலங்கள் கடந்தும்
யுகம் யுகமாக வாழும்
அருவமானது
என் உருவம் மட்டுமே
என் நினைவுகள்
உன்னில் வாழும் வரை
உன்னோடு நானிருப்பேன்

– கலையமுதினி

# நெஞ்சம் மறக்குமா மே 18

மரணத்தின் விளிம்பில் நின்று மீண்ட நான்
நினைவகளைச் சுமந்து
நடைப்பிணமாக வாழ்கிறேன்.

அகதியாக அந்நிய நாட்டில்
விமான இரைச்சல் கேட்கும் போதெல்லாம்
பட்ட அவலங்கள் நினைவில் தோன்ற
பதுங்கு குழியைக் கண்கள் தேடும்
என் செய்கை பார்ப்பவர் கண்களுக்கு
பரிகாசமாய் தோன்றினாலும்
பட்டவலியின் பாதிப்பு தொடர்கிறது
முப்படை கொண்டு மூர்க்கமாய் எம்மீது
கொத்துக் கொத்தாய் வீசிய குண்டுமழையில்
குருதியில் குளித்த உடலங்கள் சுமந்து
கதறியழுத காலங்கள் மறக்குமா?

பெற்ற மகன் கைகளில் துடிக்க
கட்டிய கணவன் உடல் சிதற
திகைத்த கணங்கள் மறந்திடக் கூடுமா?

எத்தனை வலிகளை இதயத்தில் சுமந்தும்
எத்தனை இடர்களைக் கடந்து வந்தும்
இயல்பாய் வாழ முடியவில்லை
சமாதான வலயம் என ஒன்று திரட்டி
மேக மழையென குண்டுகள் பொழிந்து
வெற்றி பெற்றதாய் இறுமாப்புடனே
பாற்சோறு பரிமாறி மகிழ்ந்ததை மறக்குமா?

திறந்த வெளிச் சிறையில்
பட்ட அவமானங்களில்
விடியலைத் தேடும் பறவையாக நான்

எத்தனை வலிகள் எத்தனை துயர்கள்
அத்தனையும் கடந்து அந்நிய தேசமதில்
வாழ்வதற்காய் வாழ்கிறோம்

மே 18 மறக்குமா?
நீறு புத்த நெருப்பாய்
நெஞ்சமதில் கனன்றிடும்

– கலையமுதினி

# நிலவின் ஒளிபட்ட நம்பிக்கை

நம்பிக்கை என்பது
வாழ்க்கையில் பூப் போன்றது
எல்லா பூக்களிலும் தேன்
இருக்கும் என்று இல்லை.

கொலுசணிந்த பாதம்
மிடுக்குடன் நடப்பதைப் போல,
நிலவின் ஒளி
எங்கும் இருளகற்றியதில்லை

நம்பிக்கையின் அழகில்
மயங்கிய மனம்
மகிழ்ச்சியில்

பாடல் இசைத்தது
அமைதியான பேச்சில்
சிரித்தது பூ முகம்

சிறு புன்னகை காணும்
வரும் கவலையும்
துன்பங்களையும் மிதித்து எழ.
பிறர் சிரிப்பில் இன்பம் தேடி
தன் இன்பத்தை கனவில் காண.

குட்டையில் தெறித்த
நிலவின் ஒளி பட்டு
அல்லிமலர்களுடன்

மீன்களும் துள்ளி
விளையாடின.

ஆறு அமைதியாக
அழகை ரசிக்க

இயற்கை
நம்பிக்கையில்
மௌனமாய் சிரிக்க

அம்மாவின் முகம்
என்றும் களங்கமில்லா
முழுநிலவு

– வெள்ளிக் கவிஞர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

